## கோயம்புத்துர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்,**
கோயம்புத்துர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்துர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்துர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லுார் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்துார்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 4093/ 2012 / எம்சி. 8 நாள் : 20.04.2012**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்துர் மாநகராட்சி - மாமன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்துர் மாநகராட்சியில் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 27.04.2012 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்துர் மாநகராட்சி

**உண்மை நகல்**

**இணைப்பு : 1**

**மாமன்ற செயலாளர்**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்துர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்துர் மாநகராட்சி

# மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஏப்ரல் 2012

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | பொது சுகாதாரம் - சிறப்பு தூய்மைக்குழு அமைத்தல் - ஒரு வருட காலத்திற்கான செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 2 | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்குகள் - மாநகராட்சி நிலை வழக்கறிஞர்கள் நியமனம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிமன்ற வழக்குகள் - மாநகராட்சி நிலை வழக்கறிஞர்கள் நியமனம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (INTEGRATED URBAN DEVELOPMENT MISSION) கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைக்காக பல்வேறு பணிகளை எடுத்துக்கொண்டது – சில மாறுதல் மேற்கொள்வது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினா் மூலம் 01.04.2012 முதல் 31.03.2013 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்த காலம் நீடிப்பு செய்தல் -உத்தேச செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | நகரமைப்புப் பிரிவு - கிருஷ்ணராயபுரம் கிராமம் - மாநகராட்சிக்கு சொந்தமான 70 சென்ட் இடம் - தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இட ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பொது சுகாதாரம் - கொசு ஒழிப்பு பணிக்காக ஏற்கனவே உள்ள 72 பணியாளர்களை 3 மாதத்திற்கு பணி நீட்டிப்பு செய்தல் மற்றும் 100 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 9 மாதங்களுக்கு பணியமா்த்துதல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | வடக்கு மண்டலம் - குத்தகை இனம் - துடியலூர் கட்டணக்கழிப்பிடம் - கட்டணம் வசூலிக்கும் உரிமம் - உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று உரிமம் ஒப்படை செய்யப்பட்டது - மாமன்றம் பின்னேற்பு கோருதல் - தொடர்பாக. |
| 9 | மத்திய மண்டலம் - 4 குத்தகை இனங்கள் - ஒரு மாதம் உரிமை காலம் நீட்டிப்பு செய்யப்பட்டது – மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக. |
| 10 | வடக்கு மண்டலம் - துடியலூர் வார சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் - ஒரு மாத காலம் நீட்டிப்பு செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 11 | மேற்கு மண்டலம் - 2012-2015ஆம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது – உரிமத் தொகையை 5 சதவீதம் உயா்வு செய்து 1 மாத காலம் உரிம நீட்டிப்பு வழங்கப்பட்டது - மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக. |
| 12 | கிழக்கு மண்டலம் - வருடாந்திர மூன்று குத்தகை இனங்கள் - உரிமத் தொகையை 5 சதவீதம் உயா்வு செய்து 1 மாத காலம் உரிம நீட்டிப்பு வழங்கப்பட்டது - மாமன்ற பின்னேற்பு கோருதல் - தொடர்பாக. |
| 13 | பொது சுகாதாரம் - பாப்பநாயக்கன்பாளையம் மின் மயானம் பராமரித்தல் - தி/வா. ஜி.கே.டி. நிறுவனத்தாருக்கு ஒப்பந்த காலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |

| | |
|---|---|
| **14** | மத்திய மண்டலம் - மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் அருகில் தரைத்தளத்தில் உள்ள கடைகள் - ஒப்பந்தப்புள்ளி கோரியது – உயர்ந்தபட்ச ஏலத்தொகையை ஏற்று ஒப்படை செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **15** | மத்திய மண்டலம் - தியாகிகுமரன் மார்கெட் வணிக வளாக கடைகள்- 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு பொதுபணி துறை மதிப்பீட்டின்படி வாடகையை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **16** | மத்திய மண்டலம் - மூன்று குத்தகை இனங்கள் - 2 இனங்களை ஏல இனங்கள் பட்டியலில் இருந்து நீக்கம் செய்தல் - ஒரு இனத்தை உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **17** | பொறியியல் பிரிவு - குறிச்சி – குனியமுத்தூர் மற்றும் கிணத்துக்கடவு கூட்டுக் குடிநீர் திட்டத்தில் ஏற்படும் மின்தடையை தற்காலிகமாக சரிசெய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஜெனரேட்டர் பொருத்த டெபாசிட் பணியாக மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ 27.02 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக. |
| **18** | பொறியியில் பிரிவு - 20 நகர்நல மையங்கள் - தூய்மைபணி மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **19** | பொதுப்பிரிவு - மாமன்ற தீர்மான நகல் வழங்குதல் - கட்டணம் உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **20** | மேற்கு மண்டலம் - வார்டு எண் 8- கவுண்டம்பாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் காலியாக உள்ள முதல் தளத்தை தபால் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **21** | மேற்கு மண்டலம் -வார்டு எண் 8- கவுண்டம்பாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் காலியாக உள்ள தரை தளத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்து - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **22** | மேற்கு மண்டலம்-ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகள் - பொது மறுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது -உச்சக் கேள்விதாரர்களுக்கு கடைகள் ஒப்படைத்தல் மற்றும் மறு பொது மின் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **23** | கிழக்கு மண்டலம் - வார்டு எண் 67 பகுதியில் அமைந்துள்ள சத்துணவு கூடத்தை தையல் பயிற்சி பள்ளி நடத்த அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியினருக்கு அனுமதி அளித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **24** | கிழக்கு மண்டலம் - ராமகிருஷ்ணாபுரம் வணிக வளாகக் கடைகள் - கடை எண்.1 மற்றும் 2 - பொது ஏலம் மூலமாக மாதாந்திர வாடகைக்கு ஒப்படைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **25** | தெற்கு மண்டலம் - வருடாந்திர குத்தனை இனங்கள் - 01.04.2012 முதல் 31.03.2015 - மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **26** | வடக்கு மண்டலம் - துடியலூர் வணிக வளாக கடைகள் - வாடகை நிர்ணயம் செய்து உரிமம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **27** | வடக்கு மண்டலம் - துடியலூர் வணிக வளாக கடைகள் - வாடகை நிர்ணயம் செய்து உரிமம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **28** | மேற்கு மண்டலம் - கவுண்டம்பாளையம் பகுதி – வார்டு எண்கள் 5, 6, 7, 8, 9 – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பைகள் அள்ளும் பணி மற்றும் சாக்கடை சுத்தம் செய்தல் - தனியார் ஒப்பந்த காலம் நீடிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **29** | கல்விப் பிரிவு - தனியார் கட்டிடத்தில் இயங்கிவரும் மாநகராட்சி சிங்காநல்லார் தெற்கு ஆரம்பப் பள்ளியின் கட்டிட வாடகைத்தொகையினை கட்டிட உரிமையாளருக்கு வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **30** | கல்விப் பிரிவு - மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழி கல்வி பயிற்றுவிக்க ஒரு பிரிவு தொடங்குதல் மற்றும், ஆசிரியர்களை தொகுப்பூய்திய அடிப்படையில் நியமித்தல்- செலவினங்களை மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **31** | கல்விப் பிரிவு - மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 10 ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகையை உயர்த்தி வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **32** | கல்விப் பிரிவு - மாநகராட்சி 9 பள்ளிகள் - ISO தரச்சான்று பெறுதல் - மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **33** | கல்விப் பிரிவு - மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவியர் பயிலும் 6 பள்ளிகள் மற்றும் 4 நடுநிலைப்பள்ளிகளில் நாப்கின் வெண்டிங் இயந்திரங்கள் மற்றும் இன்சினேரட்டர் கருவிகள் நிறுவுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **34** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்பு (IUDM) திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடை திட்ட பணிகள் முடிவுற்ற பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள சாலைகளை புதுப்புத்தல் பணிக்கு அரசிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டது- சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **35** | பொறியியல் பிரிவு -வார்டு 97 பிள்ளையார்புரம் பிரதான சாலையில் தார் சாலை அமைத்தல் பணி – ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

## அ) திருக்குறள்

உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.

**(குறள் -718)**

## விளக்கம்

சொல்வதை எளிதில் புரிந்துகொள்ளும் ஆற்றலுடைய அறிஞர் அவையில் உயர்ந்த கருத்துக்களை உரைத்தல் வளரும் பயிருக்கும் இறைக்கும் நீராகும்.

**திருவள்ளுவர்.**

---

## ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## சிறப்புத் தீர்மானம் : 1

சித்திரை மாதம் முதல்நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்து தமிழக மக்கள் மட்டுமின்றி, உலகெங்கும் வாழ்கின்ற தமிழ்மக்களின் நெஞ்சங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் நவீன வேளாண்மையில் உள்ள சவால்களை சந்தித்து தமிழகத்தில் இரண்டாம் பசுமைப்புரட்சியை ஏற்படுத்த உழவர் பெருவிழா எனும் விழிப்புணர்வு முகாம்களை கிராம அளவில் நடத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டு, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் எழுச்சியுடன் உழவர் பெருவிழா நடத்தப்பட்டு இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மாமன்றத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்து வணங்கி மகிழ்கிறோம் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் : 2

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடைப் பணிகள் 2009 முதல் முடிந்த பகுதிகளில் சாலையே போடாமல் இருந்த பகுதிகளில் 201 கி.மீ நீளத்திற்கு சாலைகள் அமைக்க முதல் கட்டமாக ரூ.14 கோடியும், இரண்டாம் கட்டமாக ரூ.52 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை பிறப்பித்தும், கோவை மாநகரில் உள்ள சத்தியமங்கலம் சாலை போக்குவரத்து நெரிசலால் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்க்கும் வகையில் டெக்ஸ்டூல் கம்பெனி அருகே இன்னொரு பாலம் வேண்டும் என்ற பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று ரூ.20 கோடி திட்ட மதிப்பீட்டில், அவ்விடத்தில் இன்னொரு பாலம் கட்டப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு இந்த சபையின் மூலமாக நன்றியை தெரிவித்துக் கொள்ளும் சிறப்பு தீர்மானம் வடக்கு மண்டலத் தலைவர் திரு.பி.ராஜ்குமார் அவர்களால் கொண்டுவரப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் : 3

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள விதிமீறிய விளம்பர பலகைகளை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க கோவை மாவட்ட ஆட்சியரை கேட்டுக் கொள்ளலாம் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் : 4

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் இயக்கப்பட்டு வரும் அனைத்து போக்குவரத்து சிக்னல்களையும் மாநகராட்சியே இயக்கி கொள்ள அனுமதி கேட்டும், சாலையின் நடுப்பகுதியில் உள்ள செடிகளின் பராமரிப்பினை மாநகராட்சிக்கு ஒப்படைக்கக் கோரியும், சிக்னல்கள் இயங்கும் இடங்களில் விளம்பரம் செய்வதற்கு டெண்டர் விடுவதற்கு மாநகராட்சிக்கு அனுமதி வழங்கக் கோரியும், மேலும் அனைத்து விளம்பரங்களுக்கும் அனுமதி அளிக்கும் முன்பாக மாநகராட்சியிடம் தடையின்மைச் சான்று பெறவேண்டும் எனவும், காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தைக் கேட்டுக் கொள்ளலாம் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் : 5

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் மாநகரின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் சாலையோர மழைநீர் வடிகால் அமைத்தல், சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்புக்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளும்போது, இடையூறாக இருக்கும் மரங்களை, முறையான அனுமதி பெற்று அகற்றும், மாநகராட்சி உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களை, குறுகிய நோக்கத்துடன், அவர்களது அரசுப் பணியினைத் தடுக்க முயலுபவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறப்புத் தீர்மானம் : 6

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்கள், கடைகள் மற்றும் மற்ற ஏல இனங்களை தங்கள் பெயரில் உரிமம் எடுத்துக் கொண்டு, உரிமம் எடுத்தவர்கள் நடத்தாமல் பிற நபர்களுக்கு உள் வாடகைக்கு விடுபவர்களின் உரிமத்தை ரத்து செய்து அந்த கடைகளை மறுஏலத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**<u>சிறப்புத் தீர்மானம் : 7</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகம் முன்பாக, ஆர்ப்பாட்டம் செய்வதற்கும், கூட்டம்கூடி கோஷங்கள் எழுப்புவதற்கும் ஏற்கனவே தடை விதித்துள்ள நிலையில், மாநகராட்சி வளாகத்தின் முன்பாக கூட்டம் கூடி கோஷங்கள் எழுப்புவதற்கோ அல்லது ஆர்ப்பாட்டம் செய்யவோ அனுமதிக்கக் கூடாதெனவும், அனுமதியின்றி கூட்டம் கூடி ஆர்ப்பாட்டம் செய்ய அனுமதிக்கப்படாத மாநகராட்சி அலுவலகம் முன்பு முன்அனுமதியின்றி, தன்னிச்சையாக கூட்டம் கூடி ஆர்ப்பாட்டம் செய்வோர்மீது, கடுமையான நடவடிக்கை எடுக்க காவல்துறை மூலம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சிறப்பு தீர்மானம் நியமனக்குழு உறுப்பினர் திரு.எம். ராஜேந்திரன் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 1

பொருள் - பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – சிறப்பு தூய்மைக்குழு அமைப்பது - தொடர்பாக.

--------------

2012-13ம்ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கையின்படி மாநகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும், சாலையோரங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், வார்டின் உட்புறப் பகுதிகளில் அப்புறப்படுத்தாமல் தேங்கிக் கிடக்கும் குப்பைக் கழிவுகள் மற்றும் கட்டிட இடிபாடுகளை அகற்றவும், நீண்ட நாட்களாக சுத்தம் செய்யப்படாமல் உள்ள மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யவும் ஏதுவாக கீழ்க்கண்ட சிறப்பு தூய்மைக்குழு அமைக்கப்பட உள்ளது. இக்குழுவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் இடம் பெறுவார்கள்.

1 . திரு.பரமசிவம் - துப்புரவு ஆய்வாளர்
2. திரு. சுப்ரமணி - துப்புரவு பணி மேற்பார்வையாளர் (வார்டு எண்.59)
3. திரு.பாலமுரளி - துப்புரவு பணி மேற்பார்வையாளர் (வார்டு எண். 72)

மேலும், அந்தந்த மண்டலங்களில் பணி நடைபெறும்பொழுது அந்தந்த மண்டல துப்புரவு அலுவலர்கள், மண்டல உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி நகரமைப்பு அலுவலர்கள் ஆகியோரும் உடனிருந்து வழிநடத்துவார்கள்.

மேலும், இக்குழுவில் 50 துப்புரவுப் பணியாளர்கள் இடம் பெறுவதால் மண்டலத்திற்கு 4 நிரந்தர துப்புரவு பணியாளர் வீதம் 5 மண்டலத்திற்கு 20 துப்புரவு பணியாளர்களை தூய்மைக் குழு பணிக்கு அமர்த்தவும், மீதமுள்ள 30 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்தவும் மற்றும் இதற்கான உத்தேச செலவினம் மதிப்பீடு ஒரு வருட காலத்திற்கு ரூ.24,50,000/-திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண்: 3570 /2011/எம்.இ.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 1 நாள் 27.04.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

**பொருள்:** பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்குகள் - ஏற்கனவே உள்ள மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுக்கு பதிலாக புதிதாக மாநகராட்சி நிலை வழக்கறிஞர்கள் - நியமனம் செய்தல் தொடர்பாக..

**பார்வை:**
1. மாமன்ற தீர்மானம் எண். 80, நாள்: 12.09.2011.
2. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் குறிப்பு ந.க.எண். 5887/2011/எம்.சி.10, நாள்: 27.03.2012.

*************

கோயம்புத்தூர் மாநகராட்சி சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளை கவனிக்க, மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாக நியமனம் வேண்டி, திரு.டி.கிருஷ்ணகுமார் மற்றும் திரு.கே.மகேஷ் ஆகிய வழக்கறிஞர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். திரு.ஏ.நவநீதகிருஷ்ணன், தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் அவர்கள், திருமதி. பி.சாந்தி வழக்கறிஞரை மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமனம் செய்ய பரிந்துரை செய்துள்ளார். மேலும் மாநகராட்சி வழக்கறிஞராக நீடிக்க அனுமதிக்க வேண்டுமாறும் திரு.ஆர்.சிவக்குமார், வழக்கறிஞர் விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி வழக்கறிஞர்களில், மாநகராட்சி வழக்குகளை நடத்துவதில் காட்டும் ஈடுபாடு மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் எளிதில் தொடர்புகொள்ள ஏதுவாக உள்ள வசதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு திரு.ஆர்.சிவக்குமார், வழக்கறிஞரை மாநகராட்சி நிலை வழக்கறிஞராக தொடர்ந்து நீடிக்க அனுமதிக்கவும், தற்போது மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாக வழக்குகளை கவனித்து வரும் திரு.உ.கருணாகரன் மற்றும் திரு.ஜே.சத்தியநாராயண பிரசாத் ஆகியோருக்கு பதிலாக, பார்வை 1-ல் காண் தீர்மானத்தில் மாநகராட்சி நிலை வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்ட முறையில் கீழ்கண்ட வழக்கறிஞர்களை மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாக நியமனம் செய்யவும், மேற்படி வழக்கறிஞர்களுக்கு மாமன்ற தீர்மானம் எண்.157, நாள்: 29.12.2009-ன்படி மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் மன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

1. திரு.டி.கிருஷ்ணகுமார், B.Sc., B.L.,
   வழக்கறிஞர்
   304, நியூ லா சேம்பர்ஸ்
   உயர்நீதிமன்ற கட்டிடம்
   சென்னை – 600 004

2. திரு.கே.மகேஷ், B.A.B.L.,
   வழக்கறிஞர்
   222, நியூ அடிஷனல் லா சேம்பர்ஸ்
   முதல் மாடி, உயர்நீதிமன்ற கட்டிடம்
   சென்னை – 600 004

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண். 10439/2009/எம்.சி.10

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 2 நாள் 27.04.2012</u>**

**கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளை நடத்த திரு.ஆர்.சிவக்குமார், திரு.ஜே.சத்தியநாராயணபிரசாத், திரு.டி.கிருஷ்ணகுமார், திரு.கே.மகேஷ் ஆகிய நான்கு வழக்கறிஞர்களை நியமனம் செய்யவும், அவர்களுக்கு மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் 3**

**பொருள்:** பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி - கோயம்புத்தூர் மாவட்ட அளவிலான நீதிமன்ற வழக்குகள் - மாநகராட்சி சார்பில் நீதிமன்றங்களில் வாதாடுதல் - புதிதாக மாநகராட்சி நிலை வழக்கறிஞர்கள் - நியமனம் செய்வது - தொடர்பாக.

**பார்வை:** 1. மாமன்ற தீர்மானம் எண். 80, நாள்: 12.09.2011.
2. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் குறிப்பு ந.க.எண். 5887/2011/எம்.சி.10, நாள்: 27.03.2012.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட வழக்குகளில் மாவட்ட அளவிலான நீதிமன்றங்களில் மாநகராட்சி நிலை வழக்கறிஞர்கள் நியமனம் செய்ய,

அ) சென்னை உயர்நீதிமன்றத்திற்கான மாநகராட்சி நிலை வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்படுவதில் கடைபிடிக்கப்படும் பார்வை 1-ல் காணும் நடைமுறையினைப் பின்பற்றி, மாவட்ட அளவிலான நீதிமன்றங்களில் மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களை நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டியும்,

ஆ) மாமன்றம் அனுமதிக்கும் பட்சத்தில், வழக்கறிஞர்கள் கழகம் மூலமாகவும் நேரிடையாகவும் பெறப்பட்ட 30 வழக்கறிஞர்களின் விண்ணப்பங்களை பரிசீலித்ததில், வழக்கறிஞர்களின் அனுபவம், மாநகராட்சி வழக்குகளில் உள்ள ஈடுபாடு, மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் எளிதில் தொடர்பு கொள்வதற்கான வசதி ஆகியவற்றின் அடிப்படையில், தற்போது மாவட்ட அளவிலான நீதிமன்ற வழக்குகளை கவனித்து வரும் திருவாளர்கள். கே. ரவிக்குமார், ஏ.ராஜேஷ் கண்ணா, கே. அசோக்குமார் மற்றும் எம். பாலசுப்ரமணியம் ஆகிய வழக்கறிஞர்களுக்கு பதிலாக கீழ்கண்ட வழக்கறிஞர்களை மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாக நியமனம் செய்யவும், அவர்களுக்கு மாமன்ற தீர்மானம் எண்.157, நாள்: 29.12.2009-ன்படி மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

1. திரு.எ.சிக்கந்தர் பாஷா, B.A, B.L.,
   வழக்கறிஞர்
   43, சபாபதி வீதி, விஸ்வேஸ்வரா அய்யர் வீதி எண்.3
   கே.கே.புதூர் அஞ்சல்,
   கோயம்புத்தூர் – 641 038.

2. திரு.கே.ராஜசேகர், B.Sc., B.L.,
வழக்கறிஞர்
40, இந்திரா நகர், நஞ்சுண்டாபுரம் ரோடு,
கோயம்புத்தூர் – 641 036.

3. திரு.டி.செந்தில்குமார், B.A.B.L., PGDPM.,
வழக்கறிஞர்
80, அரசு கலைக்கல்லூரி சாலை
கோயம்புத்தூர் – 641 018.

அலுவலகக் குறிப்பு : 'அ' (ம்) 'ஆ' அனுமதிக்கலாம். ந.க.எண். 5887/2011/எம்.சி.10

**மாநகர மன்ற தீர்மானம் எண் 3 நாள் 27.04.2012**

அலுவலகக் குறிப்பின் அ-விற்கு அனுமதி வழங்கியும், ஆ-வில் வரிசை எண் 1. திரு.ஏ. சிக்கந்தர்பாஷா மற்றும் வரிசை எண் 2. திரு.கே.ராஜசேகர் ஆகிய இரண்டு வழக்கறிஞர்களை மட்டும் மாவட்ட அளவிலான நீதிமன்றங்களில் இம்மாநகராட்சி வழக்குகளை நடத்த நிலை வழக்கறிஞர்களாக நியமனம் செய்யவும், அவர்களுக்கு மாதாந்திர தொடர் கட்டணம் வழங்கவும் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள் : ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (INTEGRATED URBAN DEVELOPMENT MISSION) கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைக்காக பல்வேறு பணிகளை எடுத்துக்கொண்டது – சில மாறுதல் மேற்கொள்வது - சம்பந்தமாக.

பார்வை :
1) மாநகர மன்ற தீர்மான எண் 211, நாள் 29-12-2011.
2) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண். 47923/2011/E3 நாள் 01-02-2012.
3) அரசு கூடுதல் தலைமைச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களால் 20-02-2012 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவு

* * * * * * *

பார்வையில் 1ல் கண்ட மாநகர மன்ற தீர்மானத்தில் பெறப்பட்ட அனுமதியினைத் தொடர்ந்து பார்வையில் 2ல் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகளில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (INTEGRATED URBAN DEVELOPMENT MISSION) கீழ் திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட பல்வேறு பணிகளை ரூ.1300.00 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விபரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | சிறிய வகை டிப்பர் லாரிகள் கொள் முதல் செய்தல் | 13 | 97.50 |
| 2. | ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் லாரிகள் கொள் முதல் செய்தல் | 14 | 280.00 |
| 3. | 660 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஜி.ஐ. (Galvanised Iron Sheet) தகரத்திலான சக்கரத்துடன் கூடிய கண்டெய்னர்கள் கொள் முதல் செய்தல் | 750 | 112.50 |
| 4. | எக்ஸ்கவேட்டர் கம் லோடர் மண் அள்ளும் இயந்திரங்கள் கொள் முதல் செய்தல் | 3 | 75.00 |
| 5. | வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கொட்டப்பட்டிருக்கும் குப்பைகளை அறிவியல் சார் முறையில் மூடுதல் மற்றும் கூடுதல் இயந்திரங்கள் நிறுவுதல் | 1 | 735.00 |
| | **மொத்தம்** | | **1300.00** |

மேற்காண் பட்டியலில் வரிசை எண். 1, 2 ,3 மற்றும் 4 ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண். 5ல் குறிக்கப்பட்டுள்ள வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கொட்டப்பட்டிருக்கும் குப்பைகளை அறிவியல் சார் முறையில் மூடுதல் மற்றும் கூடுதல் இயந்திரங்கள் நிறுவுதல் பணியினை பொருத்தவரை பார்வையில் 3ல் கண்ட அரசு கூடுதல் தலைமைச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்கள் கடந்த 20-02-2012 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டத்தில் மேற்படி பணி ஜே.என்.என்.யு.ஆர்.எம் திட்டத்தில் செயல்படுத்தப்படும் பணியினை சார்ந்த கூடுதல் பணியினமாகவுள்ளதால் அதனை கீழ்கண்டவாறு செயல்படுத்துமாறு உத்திரவு பிறப்பித்துள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1. | ஜே.என்.என்.யு.ஆர்.எம் திட்டத்தில் இப்பணிக்கென ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நிதித்தொகை | 552.00 |
| 2. | ஜே.என்.என்.யு.ஆர்.எம் திட்டத்தில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையில் ஒதுக்கப்பட்ட எதிர்பாராத (Contingencies & Unforeseen items) இனங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதித்தொகை | 285.67 |
| 3. | தனியார் பங்களிப்புத்தொகை (30%) | 376.80 |
| 4. | மாநகராட்சியின் பொது நிதி | 41.53 |
| | **மொத்தம்** | **1250.00** |

எனவே ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (INTEGRATED URBAN DEVELOPMENT MISSION) கீழ் ஏற்கனவே ரூ. 735.00 லட்சத்திற்கு உத்தேசிக்கப்பட்ட வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கொட்டப்பட்டிருக்கும் குப்பைகளை அறிவியல் சார் முறையில் மூடுதல் மற்றும் கூடுதல் இயந்திரங்கள் நிறுவுதல் பணிக்கு மாற்றாக கீழ்கண்ட பணிகளை உத்தேசிக்கலாம்.

| வ. எண் | பணியின் விபரம் | தேவையான எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | சிறிய வகை டிப்பர் லாரிகள் கொள் முதல் செய்தல் | 25 | 192.19 | ஏற்கனவே மாநகராட்சியில் 12 எண்ணிக்கைகள் உள்ளன. 13 எண்ணிக்கைகள் முதற்கட்டமாக IUDM திட்டத்தில் கொள்முதல் செய்ய மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்சமயம் 25 எண்ணிக்கைகள் கொள் முதல் செய்வதனால் மாட்டு வண்டிகளின் மூலம் குப்பை அள்ளும் முறை முற்றிலுமாக அகற்றப்படும். |
| 2. | 660 லிட்டர் கொள்ளளவு கொண்ட எஸ். எஸ். (Stainless Steel Sheet) தகரத்திலான சக்கரத்துடன் கூடிய கண்டெய்னர்கள் கொள் முதல் செய்தல் | 300 | 107.63 | ஏற்கனவே மாநகராட்சியில் 500 எண்ணிக்கைகளிலான உள்ளன. இவற்றினை கையாளுவதற்கென ஏற்கனவே மாநகராட்சியில் 11 எண்ணிக்கைகளிலான ரெப்யூஸ் கலெக்டர் காம்பாக்டர் லாரிகள் உள்ளன. 750 எண்ணிக்கைகள் முதற்கட்டமாக IUDM திட்டத்தில் கொள் முதல் செய்ய மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவற்றினை கையாளுவதற்கென 14 எண்ணிக்கைகளிலான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ரெப்பூஸ் கலெக்டர் காம்பாக்டர் லாரிகள் முதற்கட்டமாக IUDM திட்டத்தில் கொள் முதல் செய்ய மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்சமயம் 300 எண்ணிக்கைகள் கொள் முதல் செய்யலாம். இவற்றினை கையாளுவதற்கென 12 எண்ணிக்கைகளிலான ரெப்பூஸ் கலெக்டர் காம்பாக்டர் லாரிகள் இரண்டாம் கட்டமாக JNNURM திட்டத்தில் கொள் முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட எஸ். எஸ். (Stainless Steel Sheet) தகரத்திலான சக்கரத்துடன் கூடிய கண்டெய்னர்கள் கொள் முதல் செய்தல் | 900 | 433.56 | ஏற்கனவே மாநகராட்சியில் பயன்பாட்டிலிருந்த 1158 எண்ணிக்கைகளிலான HDPE கண்டெய்னர்களில் 900 எண்ணிக்கைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அவைகளை உடனடியாக மாற்றவேண்டியுள்ளது. தற்சமயம் IUDM திட்டத்தில் 900 எண்ணிக்கைகளிலான 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட எஸ். எஸ். (Stainless Steel Sheet) தகரத்திலான சக்கரத்துடன் கூடிய கண்டெய்னர்களை கொள் முதல் செய்யலாம். இவற்றினை கையாளுவதற்கென ஏற்கனவே மாநகராட்சியிலுள்ள 37 எண்ணிக்கைகளிலான ரெப்பூஸ் கலெக்டர் லாரிகளை ஈடுபடுத்தலாம். |
| | **மொத்தம்** | | **733.38** | |

எனவே ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (INTEGRATED URBAN DEVELOPMENT MISSION) கீழ் ஏற்கனவே ரூ. 735.00 லட்சத்திற்கு உத்தேசிக்கப்பட்ட வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கொட்டப்பட்டிருக்கும் குப்பைகளை அறிவியல் சார் முறையில் மூடுதல் மற்றும் கூடுதல் இயந்திரங்கள் நிறுவுதல் பணிக்கு மாற்றாக மேலே குறிப்பிட்டுள்ள உத்தேசிக்கப்பட்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் திருத்திய நிர்வாக அனுமதி பெற பிரேரணை அனுப்ப வேண்டியுள்ளதால் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 10682/2011/ எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 4 நாள் 27.04.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 01.04.2012 முதல் 31.03.2013 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக

* * * * * * *

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்பந்த தினக்கூலி அடிப்படையில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ.8905/-ம் அதற்கான சேவைக்கட்டணம் 12% அதற்குரிய சேவைவரி கட்டணம் 12%, கல்விவரிக் கட்டணம் 3% வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்த காலம் 31.03.2012 உடன் முடிவடைகிறது.

தற்பொழுது ஓட்டுநர்களை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ.8905/– அதற்கான சேவைக்கட்டணம் 12%, அதற்குரிய சேவைவரிக் கட்டணம் 10.3%, கல்விவரிக்கட்டணம் 10% வழங்குமாறு கோரியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மேற்படி ஒப்பந்தத்தை 01.04.2012 முதல் 31.03.2013 முடிய மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கும் பொருட்டு விருப்பம் தெரிவித்துள்ளனர். அதில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு தினக்கூலி அடிப்படையில் மாத ஊதியம் ரூ. 11,001/- (சேவைக்கட்டணம் 12% மற்றும் அதற்குரிய சேவைவரிக்கட்டணம் 10.3% உட்பட) மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறு அவர்களது கடித எண். TEXCO/BO CBE, நாள். 22.03.2012ல் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இம்மாநகராட்சியில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்கள் பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது அவர்கள் கேட்டுக்கொண்டுள்ள கட்டண விகிதத்தில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டு 01.04.2012 முதல் 31.03.2013 முடிய உள்ள ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தமுறையில் பணிபுரிய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 31,68,288/–க்கு அனுமதி வேண்டி பின்னேற்பிற்கு மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் எண். 7480/2010/எம்சி7

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 5 நாள் 27.04.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – நகரமைப்புப் பிரிவு - கிருஷ்ணராயபுரம் கிராமம் - மாநகராட்சிக்குச் சொந்தமான 70 சென்ட் பரப்பளவு இடம் - தமிழ்நாடு மின்சார வாரியத்தால் பாப்பநாய்க்கன்பாளையம் துணை மின் நிலையம் அமைத்தல் - இட ஒதுக்கீடு செய்தல் - தொடர்பாக

------------------

தமிழ்நாடு மின்சார வாரியம், மேற்பார்வை பொறியாளர், கோவை அவர்களின் கடிதத்தில், கோயம்புத்தூர் 100 அடி அகல சாலையினை செம்மொழி மாநாட்டின்போது விஸ்தரிப்பு செய்தபொழுது அச்சாலையில் குறுக்கே இருந்த 6 தூண்கள் கொண்ட மின்பாதை டவர் (6 pole structure) மாநகராட்சி கேட்டுக் கொண்டதற்கிணங்க, அப்புறப்படுத்தி சாலை விஸ்தரிப்பு செய்ய உதவியதாகவும், அதற்கு ஈடாக மற்றும் சுற்று வட்டாரப் பகுதிக்கு மேம்படுத்தப்பட்ட மின் விநியோகம் செய்வதற்கும் துணை மின் நிலையம் அமைக்க கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு J(10): பிளாக்.50: நகரளவு எண்.5035, பாப்பநாயக்கன்பாளையம் பகுதியில் உள்ள 70 சென்ட் நிலத்தை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

மாநகராட்சி ஆவணங்களின்படி மின் வாரியத்தால் கோருமிடம் நகரளவு எண்.5035 ஆக 0.3918.15 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் நகரமைப்பு திட்டம் எண். 16 A3A3 திட்டசாலையில் அமைகிறது. ‘காலியிடம்-ஸ்கீம் ரோடு’ என்கிற வகைப்பாட்டுடன் ஆணையாளர் கோவை மாநகராட்சி என்கிற பெயரில் உள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்தால் சாலை விஸ்தரிப்பு செய்ய மாநகராட்சிக்கு வழங்கிய இடத்தின் பரப்பு 12.11 சென்ட் ஆகும். இந்த இடம் நகர நில அளவை ஆவணத்தின்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான இடமாக உள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் மாநகராட்சியிடம் வழங்கக் கோரும் இடத்தின் பரப்பு 70 சென்ட் இடமாகும்.

நில உபயோகத்தில் ஸ்கீம் ரோடு என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. திட்டச் சாலையின் போக்கை மாற்றி, ஏற்கனவே உள்ள 100 அடி சாலை – சின்னசாமி சாலை ஆகிய சாலைகளை அவிநாசி சாலையில் நவ இந்தியா சந்திப்பு வரை நீட்டித்து சாலை அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மீண்டும் 100 அடி திட்டச்சாலை இதே பகுதியில் தேவையற்றதாகும். மேலும், பிரஸ்தாப நிலத்தின் மேலே உயர்மின் அழுத்தக் கம்பங்கள் உயரமான மின் தூண்களுடன் உள்ளதால், இந்நிலங்களின் வழியே சாலையமைப்பது சாத்தியமற்றதாகும். இத்திட்டசாலையின் ஒருபகுதி நகர் ஊரமைப்புத் துறையால் நீக்கம் செய்யப்பட்டு பட்டா நிலமாக மாற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள இடம் காலியாக உள்ளது. இச்சாலை முழுவதையும் நீக்கம் செய்ய உறுப்பினர் செயலர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதி 70 செண்ட் இடம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க அத்துறையால் கோரப்பட்டுள்ளது.

அரசாணை எண்.730, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள். 14.04.1976-ன்படி உள்ளாட்சிகளுக்கு சொந்தமான நிலங்களை அரசு துறைகள் உட்பட யாருக்கும் வழங்குவதை அரசு தடை செய்துள்ளது. அரசாணை (நிலை) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி.5) துறை; நாள்.25.02.2000 ன்படி உள்ளாட்சி நிலங்களை அரசுத்துறைகள் உட்பட யாருக்கும் வழங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்பொழுது, அரசின் முன்அனுமதி பெற்று, சந்தை விலை அடிப்படையில் நிலக்கிரயம் பெற்ற பின்னரே வழங்க வேண்டும். இதற்கு முன்னர் நடந்த நிகழ்வுகளில் இம்முறை பின்பற்றப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை (நிலை) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி.5) துறை; நாள்.25.02.2000 ன்படி தமிழ்நாடு மின்சார வாரியம், மாநகராட்சிக்கு வழங்கிய நிலத்தின் மதிப்பு மற்றும் அதற்கு ஈடாக மாநகராட்சியிடம் கோரும் நிலத்தின் மதிப்பு ஆகியவற்றிற்கு வருவாய்த்துறை மூலமாக நிலமதிப்பு நிர்ணயம் செய்து அரசிற்கு பிரேரணை அனுப்பி அரசின் ஒப்புதல் பெற்றபின்னர் தமிழ்நாடு மின்சார வாரியம், மாநகராட்சிக்கு வழங்கிய நிலத்தின் மதிப்பு மற்றும் அதற்கு ஈடாக மாநகராட்சியிடம் கோரும் நிலத்தின் மதிப்பு ஆகியவைகளை ஒப்பிட்டு கணக்கிட்டு, அதனால் ஏற்படும் வித்தியாசத் தொகையினை மின்வாரியத்திடமிருந்து பெற்ற பின்னர் 70 செண்ட் பரப்பளவு உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தை மின்வாரியத்திற்கு வழங்குவது தொடர்பாக அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.13617/2010/MH5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 6 நாள் 27.04.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள்: பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – கொசு ஒழிப்பு பணிக்காக ஏற்கனவே உள்ள 72 பணியாளர்களை 3 மாதத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும் மற்றும் 100 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 9 மாதங்களுக்கு பணிக்கு அமர்த்துவது – சம்பந்தமாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் கொசு ஒழிப்பு பணியை சிறப்பாக செயல்படுத்த 01.04.2011 முதல் 72 பணியாளர்கள் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்த சுகாதார நிலைக்குழு தீர்மான எண். 155, நாள். 08.02.2011 மற்றும் வரி விதிப்பு மற்றும் நிலைக்குழு தீர்மான எண். 127, நாள். 10.02.2011ன் படி அனுமதி வழங்கப்பட்டது. இவர்களது ஒப்பந்தகாலம் 31.03.2012 உடன் முடிவடைகிறது.

தற்போது 72 வார்டிலிருந்து 100 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே, 1 வார்டுக்கு 1 பணியாளர் வீதம் 100 வார்டுக்கு 100 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய வேண்டும். 100 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய காலதாமதம் ஆகும்.

எனவே, தற்போது உள்ள 72 பணியாளர்களை 01.04.2012 முதல் 30.06.2012 வரை 3 மாத காலம் ஒப்பந்த காலத்தை முன்பு வழங்கப்பட்ட தொகையின் அடிப்படையில் நீட்டிக்கவும் இதற்கான செலவினம் ரூ.14,80,000/-க்கும் மற்றும் தற்போது இம்மாநகராட்சி 100 வார்டுகளாக விரிவுப்படுத்தப்பட்டுள்ளதால் வார்டுக்கு 1 பணியாளர் வீதம் 100 பணியாளர்களை 01.07.2012 முதல் 31.03.2013 வரை 9 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தவும், இதற்கான செலவினம் ரூ.62,00,000/- மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றப் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 4135/2012/எம்.இ.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 7 நாள் 27.04.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனமான துடியலூர் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை 01.04.2012 முதல் 31.03.2015 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் ஒப்படை செய்வதற்குபொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.12, 21.03.12 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது. இதில் கலந்துகொண்ட ஏலதாரர்கள் மேற்படி இனத்திற்கு அரசு நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பினைக் காட்டிலும் குறைவாக ஏலம் கோரப்பட்டதால் இவ்வினத்திற்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 29.03.2012 தேதியில் நடத்தப்பட்டது. இதில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

| வரிசை எண் | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச ஏல கோரிக்கை | சென்ற ஆண்டு | மூன்று ஆண்டு சராசரி தொகை |
|---|---|---|---|---|
| 1 | எஸ்.ரமேஸ் | 87,000/- | | |
| 2 | எம்.கலில்ரகுமான் | 1,12,000/- | | |
| 3 | பி.விஜயா | 1,77,000/- | 2,54,310/- | 1,80,645/- |

மேற்படி ஏலதாரர்களில் திருமதி.பி.விஜயா என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.1,77,000/-க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளார்.

இத்தொகையானது சென்ற ஆண்டு தொகையினைக் காட்டிலும் குறைவாகவே ஏலம் கோரப்பட்டுள்ளது. இருப்பினும் மூன்றான்று சராசரியினைக் காட்டிலும் 2% மட்டுமே குறைவாக ஏலம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி இனத்தினை துறை மூலம் வசூல் செய்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் துறை மூலம் வசூல் செய்யப்படும் சமயத்தில் பணியாளர்கள் ஊதியம் மற்றும் ரசீது புத்தகங்கள் அச்சிடும் செலவு ஆகிய செலவீனங்கள் மாநகராட்சிக்கு கூடுதலாக ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, மேற்படி இனங்களுக்கு மூன்றுமுறை ஏலம் விடப்பட்டுள்ள காரணத்தாலும் மேற்கொண்டு ஏலம் விடுவதற்கு கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் தற்பொழுது பெறப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகையினை ஏற்று அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று உரிமம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது மாமன்றத்தின் பின்னேற்பிற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 903/2012/A1 (வ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 8 நாள் 27.04.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட கீழ் காணும் குத்தகை இனங்களுக்கு நடை பெற்ற மின் ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் (14.03.2012, 21.03.2012.மற்றும் 29.03.2012) உயர்பட்ச ஏலம் கோராத காரணத்தினால் இவ்வினங்களை 31.03.2012-ம் அன்று ஒப்படை செய்ய இயலவில்லை. 2011-2012-ம் ஆண்டின் ஏலத்தொகையில் 5% கூடுதலாக செலுத்தி இசைவு கடிதம் கொடுத்த கீழ் கண்ட முந்தைய குத்தகைதாரர்களுக்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று கீழ் காணும் குத்தகை இனங்களுக்கு ஒரு மாத காலம் (01.04.2012 முதல் 30.04.2012 வரை) நீட்டிப்பு வழங்கப்பட்டது.

| வ. எண் | இனம் | 2011-12-ம் ஆண்டு ஏலத்தொகை (ரூ) | 2011-12-ம் ஆண்டு ஏலத்தொகையில் 5% கூடுதலாக கணக்கீட்டு ஒரு மாதத்திற்கு செலுத்திய தொகை (ரூ) | முந்தைய ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | சீனிவாசாபுரம் கிராஸ்கட் ரோட்டில் உள்ள இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் | 25,31,500/- | 2,18,472/- | திரு.S.ரமேஷ் |
| 2 | சக்திரோடு ஆம்னி பேருந்து நிலையத்தினுள் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 12,33,000/- | 1,07,887/- | திரு.V.M.ரநாச்சிமுத்து |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | நவீன கட்டணக் கழிப்பிடம் காந்திபுரம் நகர பேருந்து நிலையம் (ஆர்.வி.ஹோட்டல் எதிரில்) | 7,90,755/- | 69,197/- | திரு.K.முனியாண்டி |
| 4 | சக்தி ரோடு புல் மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,82,700/- | 15,987/- | திருமதி.என்.ஜோதிமணி |

**வரிசை எண்.4-ல்** உள்ள இனத்திற்கு திருமதி. என். ஜோதிமணி மூன்றாம் ஆண்டுக்கு நீட்டிப்பு செய்ய சம்மத கடிதம் கொடுத்தும் மார்ச் 31-ம் தேதி ஏலத்தொகை செலுத்தாததால் அவருடைய வைப்பு தொகை ரூ.25,000/- பறிமுதல் செய்யலாம் 1.04.2012 முதல் 30.04.12 வரை ஒரு மாத காலத்திற்கு கடந்த ஆண்டு ஏலத்தொகையிலிருந்து 5% கூடுதலாக தொகை செலுத்தப்பட்டு 01.04.12 முதல் 30.04.2012 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னேற்பாக அனுமதி பெற்ற மேற்படி இனங்களுக்கு பின்னேற்பு அனுமதி பெற மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 9659 / 2010/அ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 9 நாள் 27.04.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பார்வை – வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் 31.03.2012

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனமான துடியலூர் வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை 2011-2012 ஆம் ஆண்டில் திரு.கிருஷ்ணன் என்பவருக்கு வருடம் ஒன்றிற்கு ரூ.13,23,000/- அடிப்படையில் துடியலூர் பேரூராட்சி மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உரிமக்காலம் 31.03.2012 உடன் முடிவடைகிறது. இவ்வினத்தை 2012-2015ம் ஆண்டிற்கு ஒப்படை செய்வது தொடர்பாக பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டது. மேற்படி இனத்திற்கு தொடர்ந்து மூன்று முறை நடத்தப்பட்ட ஏலங்களில் ஒருவரும் கடந்த ஆண்டுத் தொகை ரூ.13,23,000/-னைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர முன்வரவில்லை. இதனால் இவ்வினத்திற்கு மறு ஏலம் நடத்துவதற்கு கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

இந்நிலையில் 2011-12ம் ஆண்டில் உரிமம் பெற்றிருந்த உரிமதாரர் திரு.கே.கிருஷ்ணன் என்பவர் மேற்படி இனத்தினை சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ.13,23,000/-ல் 5% கூடுதலான ஏலத்தொகை அடிப்படையில் ஏப்ரல் மாதம் மட்டும் நடத்திக் கொள்ள அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

மேற்படி விண்ணப்பத்தின் அடிப்படையில் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் முன்அனுமதி பெற்று துடியலூர் வாரச் சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை திரு.கே.கிருஷ்ணன் என்பவருக்கு ஒரு வருட தொகை ரூ13,89,150/- அடிப்படையில் ஏப்ரல் மாதம் ஒன்றுக்கு ரூ.1,15,763/- க்கு உரிமம் ஒப்படை செய்யப்பட்டதுக்கும், மேலும், இவ்வினத்திற்கு பொது ஏலம் நடத்தி ஒப்படை செய்யப்படும் காலம் வரை இதே குத்தகை தொகை அடிப்படையில் மேற்படி குத்தகை தாரருக்கு உரிமம் ஒப்படைசெய்வதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண் - 1780/2012/அ1(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 10 நாள் 27.04.2012**

துடியலூர் வாரச் சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை திரு.கே.கிருஷ்ணன் என்பவருக்கு ஒரு வருட தொகை ரூ13,89,150/- அடிப்படையில் ஏப்ரல் மாதம் ஒன்றுக்கு ரூ.1,15,763/-க்கு உரிமம் ஒப்படை செய்யப்பட்டதிற்கும், மேலும், இவ்வினத்திற்கு பொது ஏலம் நடத்தி ஒப்படை செய்யப்படும் காலம் வரை இதே குத்தகை தொகை அடிப்படையில் மேற்படி குத்தகை தாரருக்கு உரிமம் ஒப்படைசெய்வதற்கும் அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2012-15-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012, 21.03.2012 மற்றும் 29.3.2012-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது சென்ற வருட குத்தகைதாரருக்கு 5 சதவீதம் உயர்வுடன் ஒரு மாதகால நீட்டிப்பு வழங்கியது – மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி கோருவது - தொடர்பாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2012-2015 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012, 21.03.2012 மற்றும் 29.3.2012 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்ட விபரங்கள்.

அ. மறுஏல தேதி – 14.03.2012

| வ எண். | குத்தகை இனங்கள் | 2011-2012-ல் ஏலத்தில் பெறப்பட்ட தொகையில் 5% கூடுதலாக நிர்ணயம் செய்யப் பட்ட தொகை (Base Value) | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வித் தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்த பட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | வடவள்ளி தினசரி சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,07,200 | 1. K.சண்முகசரவணன்<br>2.U.K.தங்கவேலு | -<br>- | 1,13,000<br>1,10,000 | 1,13,000 |
| 2. | வடவள்ளி வாரசந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,58,700 | 1.K.யுவராஜ்<br>2.S.சரவணமூர்த்தி | -<br>- | 1,59,000<br>1,35,000 | 1,59,000 |
| 3. | ஆடு அறுக்கும் தொட்டி கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 41,140 | 1.K.சண்முகசரவணன்<br>2.U.K.தங்கவேலு | 42,000 | 43,200<br>42,000 | 43,200 |

ஆ. மறுஏல தேதி – 21.03.2012

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | நவீனக்கழிப்பிடம் (வடவள்ளி பஸ் நிலையம் அருகில்) | 18,200 | 1.M.அம்மாசை<br>2.U.K.தங்கவேலு | -<br>- | 74,500<br>65,200 | 74,500 |
| 5. | காந்திபார்க் உடற்பயிற்சி சாலை (மூன்றாண்டு காலத்திற்கு மாத வாடகை அடிப்படையில்) | 1,250 | 1.A.முரளிதரன்<br>2.S.P.S.சுப்பிரமணியன்<br>3.O.A.சையது இப்ராஹீம் | -`<br>-<br>- | 3,050<br>3,000<br>- | 3,050 |

இ. மறுஏல தேதி – 29.03.2012

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | அம்பேத்கார் நகர் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 29,400 | 1.மாரியம்மாள்<br>2.செல்வி | -<br>- | 31,500<br>25,000 | 31,500 |

ஈ. சென்ற வருட குத்தகைதாரருக்கு 5 சதவீதம் உயர்வுடன் ஒரு மாதகால நீட்டிப்பு வழங்கப்பட்ட ஏல இனங்கள்

| வ. எண். | குத்தகை இனங்கள் | முந்தய குத்தகைதாரர் பெயர் | 2011 வருட குத்தகை தொகை | 2011-12-ம் வருட குத்தகைத் தொகையில் 5 சதவீதம நிர்ணயம் செய்யப்பட்ட தொகை | 5% உயர்வு செய்து ஒருமாத காலம் செலுத்திய தொகை மற்றும் நாள் 31.3.2012 ரூ. |
|---|---|---|---|---|---|
| 7. | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.J.ஸ்டீபன் | ரூ. 52,92,008 | ரூ. 55,56,608 | ரூ. 4,63,051 |
| 8. | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் நவீனக்கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.மா.மகுடபதி | ரூ. 9,00,900 | ரூ. 9,45,945 | ரூ. 78,829 |
| 9. | டி.பி.ரோடு பள்ளிவளாக வாகன நிறுத்துமிட கட்டண வசூலிக்கும் உரிமம் | திரு.மா.மகுடபதி | ரூ.21,30,000 | ரூ. 22,36,500 | ரூ. 1,68,375 |
| 10. | காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (வருடாந்திர அடிப்படையில்) ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு | திரு.M.அருண்சங்கர் | ரூ. 7,77,420 | ரூ. 8,16,291 | ரூ. 68,025 |
| 11. | கவுண்டம்பாளையம் அசோக்நகர் கீழ்பகுதி ஆண்கள் கழிப்பிடம் | திரு. S.M.சண்முகம் | ரூ. 22,500 | ரூ. 23,625 | ரூ. 2,000 |
| 12. | அசோக் நகர் கீழ் பகுதி பொது ஆண் / பெண் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.P.மருதாசலம் | ரூ. 3000 | ரூ. 3,150 | ரூ.265 |
| 13. | பிரபுநகர் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.சி.பொன்ராஜ் | ரூ. 1100 | ரூ. 1,155 | ரூ. 105 |
| 14. | வடவள்ளி மெயின்ரோடு இடையர்பாளையம் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.நஞ்சன் | ரூ. 1800 | ரூ. 1,890 | ரூ. 158 |

அ வரிசை உள்ள 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்பினைவிட அதிகமாக ஏலம் கோரிய திரு. 1.K.சண்முகசரவணன் திரு.K.யுவராஜ் மற்றும் K.சண்முகசரவணன் ஆகியவர்களுக்கு ஒப்படைப்பு செய்யவும்

ஆ. வரிசை உள்ள 4 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்பினைவிட அதிகமாக ஏலம் கோரிய திரு.M.அம்மாசை மற்றும் திரு.A.முரளிதரன் ஆகியவர்களுக்கு ஒப்படைப்பு செய்யவும்

இ. வரிசை உள்ள 6 உள்ள இனத்திற்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்பினைவிட அதிகமாக ஏலம் கோரிய திருமதி.மாரியம்மாள் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யவும்

ஈ. வரிசை உள்ள 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.95 நாள்.27.03.2012 அனுமதி அளித்ததை தொடந்து மாமன்றத்தின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒதுக்கீடு வழங்கப்பட்டது தற்சமயம் மாமன்றத்தின் பின்னேற்பிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

வரிசையிலுள்ள 7-14 இனங்களுக்கு சென்ற வருட குத்தகைதாரருக்கு 2011-12 ஏலத்தொகையில் 5 சதவீதம் உயர்வுடன் ஒரு மாதகால நீட்டிப்பு வழங்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் முன்அனுமதி பெற்றும் வணக்கத்திற5555ப

.குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்றும் ஒருமாதகால நீட்டிப்பு வழங்கபட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

வரிசை எண். 11-14 வரை உள்ள கட்டண கழிப்பிடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் பழுதுகளை சரி செய்ய உதவி நிர்வாக பொறியாளருக்கு குறிப்பு அனுப்பலாம் அதுவரை பொது ஏலத்தில் கொண்டுவருவதை பழுதுகள் சரிசெய்யும் வரை தற்காலிகமாக நிறுத்திவைக்கலாம்.

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் முன் அனுமதி பெற்றும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் ஒதுக்கீடு வழங்கப்பட்ட இனங்களுக்கு தற்சமயம் மாமன்றத்தின் பின்னேற்பிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அ, ஆ, இ மற்றும் ஈ அனுமதிக்கலாம் ந.க.எண்.497/2012/அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 11 நாள் 27.04.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, உரிமம் ஒதுக்கீடு வழங்கப்பட்ட இனங்களுக்கு பின்னேற்பு வழங்கியும், அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கியும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

**பொருள்-** கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் 01.04.2012 முதல் 30.04.2012- வரை ஒருமாத காலம் உரிமம் நீட்டிப்பு செய்தது - தொடர்பாக.

-------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்காணும் குத்தகை இனங்களுக்கு பலமுறை பொது ஏலம் நடத்தப்பட்டும், அரசு மதிப்புக்கு அதிகமாக ஏலம் கோர எவரும் முன்வரவில்லை.

| வ. எண் | குத்தகை உரிம இனம் | 2011-2012 ம் ஆண்டு ஏலம் எடுத்தவரின் பெயர் | கடைசி ஆண்டு ஏலத் தொகை | 5 % உயர்வு செய்யப்பட்ட ஏலத் தொகை | ஒரு மாதத்திற்கான ஏலத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | புலியகுளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் | திரு.வி.மணிவண்ணன் | 2,07,000 | 217350 | 18113 |
| 2. | சிங்காநல்லூர் பேருந்து நிலைய பேருந்து நுழைவு கட்டணம் | திரு.ஓ.எஸ்.சையத் இப்ராஹீம் | 12,90,900 | 13,55,445 | 1,12,954 |
| 3. | சிங்காநல்லூர் பேருந்து நிலைய தொலைபேசி நிலையம் அமைத்து நடத்தும் உரிமம் | திரு. எஸ்.ராமசாமி | 31,000 | 32,550 | 2,713 |

எனவே மேற்காணும் இனங்களுக்கு முந்தைய ஆண்டின் ஏலத் தொகையில் 5 % உயர்வு செய்து அத்தொகையினை செலுத்திய ஏலதாரர்களுக்கு ஒருமாத காலம் குத்தகைஇனம்தனை தொடர்ந்து நடத்தி கொள்ள அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்யப்பட்டதை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.மேலும் மறு ஏலம் நடத்தி ஒப்படை செய்யும் காலம் வரை கடந்த ஆண்டு குத்தகையில் 5% உயர்வு செய்த தொகையில் உரிமம் நீட்டிப்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.00864/12/கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 12 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படை செய்யப்பட்டதை ஏற்றும் மறு ஏலம் நடத்தி ஒப்படை செய்யும் காலம் வரை கடந்த ஆண்டு குத்தகையில் 5% உயர்வு செய்த தொகையில் உரிமம் நீட்டிப்பு வழங்கியும் அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் :- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பாப்பநாய்க்கன் பாளையம் மின்மயானம் - தி/வா ஜி.கே.டி நிறுவனத்தார் பராமரிப்பு ஒப்பந்தகாலம் 25.03.2012 முதல் மேலும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பிப்பது - தொடர்பாக.

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்தில் உள்ள பாப்பநாயக்கன் பாளையம் மின்மயானம் தி/வா. ஜி.கே.டி. பிரதர்ஸ் பப்ளிக் வெல்பேர் பவுண்டேசன் நிறுவனத்தாரால் இதுகாரும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஒரு எரியூட்டுக்கு ரூ.750/- வசூல் செய்யவும் இதில் மாநகராட்சி 70%-ம் மேற்படி நிறுவனத்தார் 30%-ம் பகிர்ந்து கொள்ளவும் இம்மயானத்திற்கு வேண்டிய மின்சாரம், தண்ணீர் ஆகியன மாநகராட்சி செய்து தரவும் அனுமதித்து மாமன்ற தீர்மான எண் 185. நாள்.13.01.2010ல் தீர்மானம் இயற்றப்பட்டு, 25.03.2009-ம் தேதி முதல் 3 ஆண்டுகள் நீட்டித்து உத்தரவு வழங்கப்பட்டது.

இதற்கிடையில் மேலே கண்ட 3 ஆண்டு காலம் 24.03.2012ம் தேதியோடு முடிவடைவதால் 25.03.2012ம் தேதி முதல் 3 ஆண்டு காலம் ஒப்பந்த காலத்தை நீட்டித்து தருமாறு சம்மந்தப்பட்ட அறக்கட்டளையால் 12.03.2012 அன்று விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 122 ந.நி.(ம).கு.வ.து. நாள். 27.06.2008ல் ஒவ்வொரு நேர்வில் அரசுக்கு கருத்துரு அனுப்பி அதனை பரிசீலித்து தனித்தனியே ஆணைகள் வெளியிடுவதை தவிர்க்கலாம் எனவும், இவ்வாணையில் பிற்சேர்க்கையாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு புதிய நவீன மின் மயானம் அமைக்க தனியார் அறக்கட்டளை /தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தை இனிவரும் காலங்களில் மாநகராட்சிகளைப் பொறுத்தமட்டிலும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு வழங்கி ஆணையிட்டுள்ளது.

மேலும், மயானம் அமைப்பது தொடர்பாக இதற்கு முன், அனுமதி வழங்கப்பட்ட இனங்களில் அனுமதி காலம் முடிந்த பின், புதிய நிபந்தனைகளை மட்டுமே விதித்து அனுமதி வழங்கலாம் எனவும், இவ்வாணையின் பிற்சேர்க்கையாக குறிப்பிடப்பட்டுள்ள புதிய நிபந்தனைகளில் வரிசை எண்.2-ல் காலநீட்டிப்பு வேண்டி விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பத்தினை பரிசீலித்து நவீன தகன மேடையினை பராமரிக்கும் உரிமத்தை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் புதுப்பித்து / நிராகரித்து ஆணை பிறப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது எனவே தி/வா.ஜி.கே.டி. பிரதர்ஸ் பப்ளிக் வெல்பேர் பவுண்டேசன் நிறுவனத்தாருக்கு அரசாணையில் குறிப்பிட்டுள்ள புதிய நிபந்தனைகளின்படி முன்பு பகிர்ந்து கொள்ளப்பட்ட கட்டண விகிதங்களில் எவ்வித மாறுதல் இல்லாமல் 25.03.2012 முதல் மேலும் 3 ஆண்டுகள் ஒப்பந்தத்தை புதுப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- பாப்பநாயக்கன்பாளையம் மின்மயானம் பராமரிப்பை ஏற்கனவே பராமரித்து வரும் ஜி.கே.டி நிறுவனத்தாரையே புதிய நிபந்தனைகளின்படி 25.03.2012 முதல் 3 ஆண்டுகள் நீடித்து அனுமதிக்கலாம்.

ந.க.எண். 14476 /98/ எம். இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 13 நாள் 27.04.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட கீழ் காணும் குத்தகை இனத்திற்கு 11.04.2012 அன்று நடைபெற்ற முதல் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | குத்தகை இனத்தின் பெயர் | அரசாங்க மதிப்பீட்டுத் தொகை மாத வாடகை ரூ. | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ. | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் அருகில் தரைதளத்தில் மூன்றுகடைகள். | | | | |
| | கடை எண்.2 | 8,895/- | திரு.K.வேதேஸ்வரன் | 60,000/- | ஒப்பந்தப்புள்ளி |
| | கடை எண்.3 | 8,505/- | திரு.N.சீனிவாசன் | 60,000/- | ஒப்பந்தப்புள்ளி |
| 2 | மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் அருகில் முதல் தளத்தில் மூன்றுகடைகள்.<br>கடை எண்.4 | 9,615/- | திரு.A.மணிகண்டன் | 15,000/- | ஒப்பந்தப்புள்ளி |
| | கடை எண்.5 | 8,895/- | திரு.A.மணிகண்டன் | 15,000/- | ஒப்பந்தப்புள்ளி |
| | கடை எண்.6 | 8,505/- | திரு.R.சுப்ரமனியம் | 15,000/- | ஒப்பந்தப்புள்ளி |

வரிசை எண்.1 மற்றும் 2-ல் அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக கடை எண்.2,3.4.5 மற்றும் 6க்கு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடைகளுக்கு பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏலத்தொகை ஏற்று ஒப்படை செய்திட வரிவிதிப்பு மற்றும் நிதிகுழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 23.04.2012 ம் தேதிய தீர்மான எண்.11-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.9659/10/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 14 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.11 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

| பொருள் : | வணிகவளாக கடைகள் கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலம் - தியாகிகுமரன் மார்கெட் - காலம் - 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு பொதுபணி துறை மதிப்பீட்டின்படி வாடகையை உயர்வு செய்தல் - தொடர்பாக. |
|---|---|
| பார்வை : | 1. அரசாணை எண். 147 நாள். 30.12.2000.<br>2. அரசாணை எண். 92 நாள். 03.07.2007. |

******

பார்வையில் காணும் அரசாணைப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட தியாகிகுமரன் மார்கெட் கடைகள் 29.07.2004-ன்படி வாடகை உயர்வு செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாடகை மதிப்பு மற்ற தனியார் நிறுவனங்களை ஒப்பிட்டு பார்க்கையில் மிகவும் குறைவாக உள்ளது. மேற்படி கடைகளுக்கு அரசின் ஆணைப்படி தற்போதைய சந்தை மதிப்பில் வாடகை உயர்வு செய்வதற்கும், சேவை வரி 12.30% யினை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் ஒப்படைக்கவும், ஒப்புக் கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறுஏலத்திற்கு கொண்டுவரவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 23.04.2012 ம் தேதிய தீர்மான எண். 20-ல் அலுவலக குறிப்பை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.9659/10/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 15 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.20 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

பார்வை- வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 13 நாள் 23.04.2012

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட கீழ் காணும் குத்தகை இனங்களை 2012-2015-ம் ஆண்டிற்கான ஏல இனங்கள் பட்டியிலிருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1. <u>நவீன கட்டணக் கழிப்பிடம் தர்மராஜா கோவில் வீதி</u>

   இவ்வினத்திற்கு துறை மூலம் வசூல் நாள் ஒன்றுக்கு தோராயமாக ரூ.26/- மட்டுமே வசூலாகிறது. மேற்படி கழிப்பிடத்திற்கு வசூல் செய்ய ஒரு நபர் மற்றும் சுத்தம் செய்ய ஒரு நபரும் அமர்த்தப்பட்டுள்ளது. இருவருடைய ஊதியத்தை கருத்தில் கொண்டு மாநகராட்சிக்கு ஏற்படுகின்ற இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கழிப்பிடத்தை அப்பகுதி மக்களுக்கு இலவசமாக உபயோகப்படுத்தும் வகையில் ஒதுக்கீடு செய்யலாம். ஏல இனங்கள் பட்டியிலிருந்து நீக்கம் செய்யலாம்.

2. <u>நேரு ஸ்டேடியம் நுழைவாயில் அருகாமையில் (கோவை மாவட்ட கால்பந்து கழகம் அலுவலகம் எதிரில்) உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்</u>

   இவ்விடத்தில் வணிக வளாக கடைகள் அமைப்பதற்கான சாத்திய கூறுகள் குறித்து ஆய்வு செய்து மேல்நடவடிக்கை எடுக்கலாம். ஏல இனங்கள் பட்டியிலிருந்து நீக்கம் செய்யலாம்.

3. <u>சிவானந்தா காலனி அறிவியல் பூங்கா - (சுய உதவி குழுக்கள் மட்டும்)</u>

   இவ்வினத்திற்கு தொடர்ந்து ஆறு முறை ஏலம் கோரப்பட்டுள்ளது. ஒருவரும் ஏலம் கோர முன்வரவில்லை. 11.04.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் மிக குறைந்த ஏல கோரிக்கை ஆக ரூ.36,000/-கோரப்பட்டது. சிவானந்தா காலனி அறிவியல் பூங்காவை பள்ளி குழந்தைகள் பயன்படும் வகையில் இலவசமாக வழங்கலாம். ஏல இனங்கள் பட்டியிலிருந்து நீக்கம் செய்யலாம்.

   இப்பொருள் தொடர்பாக வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 23.04.2012 ம் தேதிய தீர்மான எண். 13-ல் வரிசை எண்.1 மற்றும் 2க்கு ஒப்புதல் வழங்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளது. வரிசை எண்.3 உள்ள இனத்திற்கு கட்டணமாக ரூ.5/- பெரியவருக்கும், ரூ.3/- சிறியவருக்கும், ரூ.2/- பள்ளிக் குழந்தைகள் குழுவாக அழைத்து வரும் பொழுதும் வசூலிக்க மாமன்ற தீர்மான எண்.53 நாள் 10.08.2011-ன்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

   உயர்ந்தபட்ச ஏலக்கோரியினை ஏற்றும் இவ்வினத்தில் வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் சிறியவருக்கு ரூ.1/-ம், பெரியவருக்கு ரூ.2/- என நிர்ணயம் செய்யவும், தற்போதைய உயர்ந்தபட்ச கேள்விதாரர் இக்கட்டணங்களை ஏற்க சம்மதித்தால் அவருக்கு ஒதுக்கீடு செய்யலாம் எனவும் மாமன்றத்துக்கு பரிந்துரை செய்து தீர்மானித்துள்ளதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.9659/10/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 16 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.13 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – குறிச்சி – குனியமுத்தூர் மற்றும் கிணத்துக்கடவு கூட்டுக் குடிநீர் திட்டத்தில் ஏற்படும் மின்தடையை தற்காலிகமாக சரிசெய்ய – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஜெனரேட்டர் பொருத்த டெபாசிட் பணியாக மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ 27.02 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

------------------

மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோயம்புத்தூர்- நீலகிரி வட்டம் மற்றும் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிப்புக் கோட்டம் - சிறுவாணி அவர்களிடமிருந்து (கடித எண்.F-KKK/ Genset/AE-I/CNC.Cbe/2012 நாள் 04-04-2012 மற்றும் கடித எண் F-KKK/Genset/Adman-II/Dn(S)/ cbe/2012 நாள் 04-04-2012) பெறப்பட்ட கடிதங்களில் குறிச்சி – குனியமுத்தூர் மற்றும் கிணத்துக்கடவு கூட்டுக் குடிநீர் திட்டத்தில் ஏற்படும் மின்தடையை தற்காலிகமாக சரிசெய்யவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஜெனரேட்டர் (வாடகைக்குப் பெறப்பட்டு) பொருத்தவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.27.02 இலட்சம் மாதம் ஒன்றுக்கு, அனைத்து நீர் உந்து நிலையங்களில் பொருத்தவும் இப்பணியை டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும் மேற்படி தொகையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் செலுத்தவும் ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தில் ஜெனரேட்டர் பொருத்த ரூ10.00 இலட்சம் முன்பணமாக நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பராமரிப்புக் கோட்டம் (சிறுவாணி) அவர்களுக்கு காசோலையாக செலுத்தப்பட்டது.

எனவே, மதிப்பீட்டுத் தொகை ரூ27.02 இலட்சத்தில் ரூ10.00 இலட்சம் முன்பணமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தியதற்கு, குறிச்சி- குனியமுத்தூர்- கிணத்துக்கடவு திட்டங்களின் மூலம் குறிச்சி மற்றும் குனியமுத்தூர் உள்ளாட்சி அமைப்புகள் பெறப்படும் குடிநீருக்கு மாநகராட்சியிடம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வசூலிக்கப்படும் குடிநீர் கட்டணத் தொகையில் ஈடு செய்யவும், மேற்படி பணியை டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. ரூ10.00 இலட்சம் முன்பணமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தியதற்கு அனுமதி வழங்கலாம்.
2. ரூ 27.02 இலட்சம் மாதம் ஒன்றுக்கு அனைத்து நீர் உந்து நிலையங்களில் ஜெனரேட்டர் வாடகைக்கு பெறப்பட்டு குறிச்சி – குனியமுத்தூர் மற்றும் கிணத்துக்கடவு கூட்டுக் குடிநீர் திட்டத்தில் ஏற்படும் மின்தடையை தற்காலிகமாக சரிசெய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் டெபாசிட் பணியாக மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி தொகையை மாநகராட்சியிடம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் வசூலிக்கப்படும் குடிநீர் கட்டணத் தொகையில் ஈடு செய்யவும் அதற்கான கடிதம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4282/ 2012/ ப.வ(எம்)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 17 நாள் 27.04.2012**

அலுவலகக் குறிப்பு 1, 2, 3-க்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 20 எண்ணிக்கையில் உள்ள மாநகராட்சி நகர் நல மையங்களில் காவலர்கள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர், மின் கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 74,50,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் பொருட்டு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 4866/2012/ எம்.டி 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 18 நாள் 27.04.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 19

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற தீர்மான நகல் வழங்குதல் - கட்டணம் உயர்வு செய்தல் - தொடர்பாக

பார்வை – வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 18 நாள் 23.04.2012

---------------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடைபெறும் மாமன்றக் கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களின் நகல் பொதுமக்களுக்கு வழங்குவதற்குரிய கட்டணம், மாமன்ற தீர்மானம் எண் 191 நாள் 25.10.1999ன்படி ரூ. 25.00 (ரூபாய் இருபத்து ஐந்து மட்டும்) என நிர்ணயம் செய்யப்பட்டு, நாளது தேதிவரை நடைமுறையில் இருந்து வருகிறது.

மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சுமார் 12 ஆண்டுகள் கடந்துவிட்டதாலும், மாமன்ற தீர்மானம் சம்பந்தப்பட்ட பொருள், சிலநேர்வுகளில் மூன்று பக்கம் முதல் ஏழு பக்கங்கள் வரை உள்ளதாலும், மாமன்ற தீர்மானம் நகல் பொதுமக்களுக்கு வழங்குவதற்குரிய கட்டணத்தை குறைந்தபட்சம் ரூ. 25.00 (மூன்று பக்கங்களுக்கு) எனவும், அதற்குப்பின் ஒவ்வொரு பக்கத்திற்கும் ரூ.5.00 எனவும் உயர்த்தி நிர்ணயம் செய்யலாம் என வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டதில், பார்வையில் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 18 நாள் 23.04.2012ன்படி, ‘‘மூன்று பக்கங்களுக்கு மிகாமல் உள்ள தீர்மான நகல் ஒன்றுக்கு ரூ. 100 எனவும், கூடுதல் பக்கம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 எனவும் உயர்த்தி நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்க பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது‘‘ என தீர்மானித்துள்ளது. இப்பொருள் குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மூன்று பக்கங்களுக்கு மிகாமல் உள்ள தீர்மான நகல் ஒன்றுக்கு ரூ. 100 எனவும், கூடுதல் பக்கம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 எனவும் உயர்த்தி நிர்ணயம் செய்யலாம்.

ந.க.எண் 11123/2011/எம்.சி. 8

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 19 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.18 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

| | |
|---|---|
| பொருள்- | கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் -வார்டு எண் 8-ல் உள்ள கவுண்டம்பாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் காலியாக உள்ள முதல் தளத்தை தபால் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து - வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக. |

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண் 8-க்கு உள்ள பழைய கவுண்டம்பாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் முதல் தளத்தில் ஒரு பகுதியான 11.15 மீ x 6.35 மீ மற்றும் 3.30 மீ x 2.40 மீ அளவுள்ள இரண்டு அலுவலக அறைகள் மொத்தம் 847 சதுர அடி பரப்பளவில் உள்ளது. மேற்க்கண்ட கட்டிடத்தை தபால் தந்தி துறையினர் அலுவலகம் அமைக்க கடிதம் எண் D/151 நாள் 15.2.2012-ல் வாடகைக்கு கேட்டு கடிதம் கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட கட்டிடத்திற்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி ஒரு சதுர அடிக்கு ரூ.14.70/- வீதம் 847 சதுர அடிக்கு மாத வாடகையாக ரூபாய் 12,450/- நிர்ணயம் செய்யலாம் என உதவி செயற்பொறியாளர் (மேற்கு) அவர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்.

மேற்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்து தபால் தந்தி துறையினருக்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாதவாடகையாக ரூபாய் 12,450/- என நிர்ணயம் செய்து வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 15 நாள் 23.04.2012 –ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 2887 / 2012/ டி1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 20 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.15 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் -வார்டு எண் 8-ல் உள்ள கவுண்டம்பாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் காலியாக உள்ள தரை தளத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்து - வாடகை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண் 8-க்கு உள்ள பழைய கவுண்டம்பாளையம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் தரை தளத்தில் ஒரு பகுதியான 22' x 10' அடி உள்ள இரண்டு அறைகளும், 10' x 10' அடி அளவுள்ள இரண்டு அறைகள் மொத்தம் 640 சதுர அடி பரப்பளவில் உள்ளது. மேற்க்கண்ட கட்டிடத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினர் அலுவலகம் அமைக்க கடிதம் எண் F/buildgs /JDO/2012 நாள் 28.03.2012-ல் வாடகைக்கு கேட்டு கடிதம் கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட கட்டிடத்திற்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி ஒரு சதுர அடிக்கு ரூ.11.62/- வீதம் 640 சதுர அடிக்கு மாத வாடகையாக ரூபாய் 7,437/- நிர்ணயம் செய்யலாம் என உதவி செயற்பொறியாளர் (மேற்கு) அவர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்.

மேற்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினர் அலுவலகம் அமைக்க ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் மாதவாடகையாக ரூபாய் 7,437/- என நிர்ணயம் செய்து வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 16 நாள் 23.04.2012 –ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 3612 / 2012 / டி1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 21 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.16 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம்-ரங்கே கவுடர் வீதி நவீன மலர் அங்காடி வணிக வளாக கடைகளுக்கு 25.1.2012 அன்று பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது -உச்சக் கேள்விதாரர்களுக்கு கடைகள் ஒப்படைத்தல் மற்றும் மறு பொது மின் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்றக் கூட்டத்தின் அனுமதி கோருவது - தொடர்பாக.

பார்வை: மாமன்ற தீர்மான எண்.123 நாள்.29.10.2010

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி-மேற்கு மண்டல்ம –ரங்கே கவுடர் வீதி நவீன வணிக வளாக கடைகளுக்கு 25.01.2012 அன்று பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.இதில் கீழ்க்குறிப்பிட்ட கடைகளுக்கு குறிப்பிட்டுள்ள உயர்ந்தபட்ச மாத உரிமம் தொகை கோரப்பட்டுள்ளது.

<u>அ.பிளாக்-I கடைகள் பூவியாபர கடைகள் (மாதாந்திர அடிப்படையில்)</u>

| வ. எண் | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாத உரிம மதிப்பு | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி தொடர்பாக | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | 25.01.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | 25.01.2012 நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையில் 5% உயர்வு செய்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | |
| 1. | 13 | H.ஜாபர் அலி | 7,660 | - | 13,650 | 13,650 |
| | 13 | P.பாலகிருஷ்ணன் | 7,660 | 13,000 | | - |
| 2. | 14 | செல்வகுமார் | 8,470 | - | 14,175 | 14,175 |
| | 14 | P.பாலகிருஷ்ணன் | 8,470 | 13,500 | - | - |

அ.பிளாக்-II கடைகள் மலர்கொத்து அங்காடி, உயர்தர பூ அங்காடி பூஜை பொருட்கள் அங்காடி பூவியாபார அங்காடி (மாதாந்திர அடிப்படையில்)

| வ.எண் | கடை எண் | பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட மாத உரிம மதிப்பு | மாதாந்திர உரிம கட்டணம் உச்ச கேள்வி தொடர்பாக | | உயர்ந்தபட்ச ஏலம் ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | 25.01.2012 நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | 25.01.2012 நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையில் 5% உயர்வு செய்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | |
| 1 | 19 | A.S.ஹக்கீம் | 9,600 | | 12,600 | 12,600 |
| | 19 | K.பாலகிருஷ்ணன் | 9,600 | 12,000 | - | - |
| 2 | 23 | M.உஷ்மான் பீர் | 6,000 | - | 11,550 | 11,550 |
| | 23 | N.P.விஸ்வநாதன் | 6,000 | 11,000 | - | - |
| 3 | 42 | Y.முபாரக் அலி | 7,810 | - | 9,450 | 9,450 |
| | 42 | ருக்கமணியம்மாள் | 7,810 | 9,000 | - | - |

பிளாக் எண். Iல் கடை எண்.13க்கு 25.01.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்சமாக ரூ.13000 கோரிய ஒப்பந்தப்புள்ளித் தொகையில் 5% கூடுதலாக ரூ.13650 திரு.எச்.ஜாபர் அலி ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். 11.04.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளததால் இது அரசு நிர்ணயம் செய்த மதிப்பை காட்டிலும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டிருப்பதால் திரு.எச்.ஜாபர் அலிக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

பிளாக் எண். Iல் கடை எண்.14க்கு 25.01.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்சமாக ரூ.13500 கோரிய ஒப்பந்தப்புள்ளித் தொகையில் 5% கூடுதலாக ரூ.14,175 திரு.செல்வகுமார் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். 11.04.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளததால் இது அரசு நிர்ணயம் செய்த மதிப்பை காட்டிலும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டிருப்பதால் திரு.செல்வகுமார் ஒதுக்கீடு செய்யலாம்.

பிளாக் எண். IIல் கடை எண்.19க்கு 25.01.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்சமாக ரூ.12000 கோரிய ஒப்பந்தப்புள்ளித் தொகையில் 5% கூடுதலாக ரூ.12,600 திரு.எ.எஸ்.ஹக்கீம் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். 11.04.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளததால் இது அரசு நிர்ணயம் செய்த மதிப்பை காட்டிலும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டிருப்பதால் திரு.எ.எஸ்.ஹக்கீம் ஒதுக்கீடு செய்யலாம்.

பிளாக் எண். IIல் கடை எண்.23க்கு 25.01.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்சமாக ரூ.9,000 கோரிய ஒப்பந்தப்புள்ளித் தொகையில் 5% கூடுதலாக ரூ.9,450 திரு. M.உஷ்மான் பீர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். 11.04.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளததால் இது அரசு நிர்ணயம் செய்த மதிப்பை காட்டிலும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டிருப்பதால் திரு. M.உஷ்மான் பீர் ஒதுக்கீடு செய்யலாம்.

பிளாக் எண். IIல் கடை எண்.42க்கு 25.01.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் உயர்ந்தபட்சமாக ரூ.10,000 கோரிய ஒப்பந்தப்புள்ளித் தொகையில் 5% கூடுதலாக ரூ.11,550 திரு. Y.முபாரக் அலி ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். 11.04.2012 அன்று நடைபெற்ற ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளததால் இது அரசு நிர்ணயம் செய்த மதிப்பை காட்டிலும் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டிருப்பதால் திரு. Y.முபாரக் அலி ஒதுக்கீடு செய்யலாம்.

மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிதாருக்கு கடையை ஒதுக்கீடு செய்ய ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படி, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 14 நாள். 23.04.2012 ன் படி அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.9451/2009/அ1(மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 22 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.14 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 23**

பொருள் - வார்டு எண் 67 பகுதியில் அமைந்துள்ள சத்துணவு கூடத்தை தையல் பயிற்சி பள்ளி நடத்த அனுமதித்தல் தொடர்பாக.

பார்வை - அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியிடமிருந்து பெறப்பட்ட கடிதம் எண் 28(2), ப.வ.ச.மே.தி, அ.பா.க – கோவை நாள் 31.01.2012.

----------------

பார்வையில் காணும் கடிதத்தின்படி, கோயம்புத்தூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் ஆதரவுடன் இலவச தொழிற்பயிற்சி வகுப்புகள், கல்வியை தொடர முடியாத ஏழை எளியோர் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் இருப்போர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளனர். மேற்படி பயிற்சி வகுப்புகளை கோயம்புத்தூர் மாநகராட்சி 67வது வார்டு பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இலவச தையற்பயிற்சியினை ராமநாதபுரம் பகுதியில் வழங்க உள்ளனர். மேற்படி பயிற்சியினை நடத்த ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி துவக்கப்பள்ளி அருகில் உள்ள சத்துணவு மையத்தை தந்துதவ கோரியுள்ளனர்.

1) 67வது வார்டு பூசாரி மாரியப்பன் கோவில் வீதியில் அமைந்துள்ள மாநகராட்சி கட்டிடத்தில் சத்துணவு மைய எண் 18 இயங்கி வந்துள்ளது. தற்சமயம் இம்மையம் அருகில் உள்ள ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் இயங்கி வருகிறது. ஏற்கனவே சத்துணவு மையம் இயங்கிய கட்டிடம் உபயோகப் படுத்தப்படாததால் சிதிலம் அடைந்துள்ளது எனவும், சுமார் ரூ. 30000/- அளவில் மராமத்து பணிகள் செய்த பின்னர்தான் கட்டிடத்தை உபயோகப்படுத்த இயலும் என உதவிப் பொறியாளர் குறிப்பு வழங்கியள்ளார். எனவே, மராமத்து பணிகள் செய்ய சுமார் ரூ.30,000/- செலவினத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2) தற்சமயம் மாநகராட்சி கட்டிடங்களில் இயங்கிவரும் சத்துணவு மையங்களுக்கு மாதம் ரூ.100/- வீதம் வருடத்திற்கு ரூ.1,200/- வாடகையாக வசூலிக்கப்பட்டு வருகிறது. அரசு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் கோரியபடி பூசாரி மாரியப்பன கோவில் வீதியில் அமைந்துள்ள சத்துணவு கூடத்தை 01.04.2012 முதல் 31.03.2013 வரை இலவச தையற்பயிற்சிவகுப்புகள் நடத்த மாதம் ரூ.100/- வீதம் வருடத்திற்கு ரூ.1,200/- வாடகைக்கு வழங்குவது தொடர்பாக வரி விதிப்பு மற்றும் நிதிக் குழுவின் தீர்மான எண 25 நாள் 23.04.2012 ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.1695/2012/கிடி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 23 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 25 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 24**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - ராமகிருஷ்ணாபுரம் வணிக வளாகக் கடைகள் - கடை எண்.1 மற்றும் 2 பொது ஏலம் மூலமாக மாதாந்திர வாடகைக்கு ஒப்படைத்தல் - தொடர்பாக.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம் வார்டு எண்.67 ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்.1, 2 மற்றும் 3 ஆகியவற்றின் பேரில் வழக்கு நடைபெற்றதில் சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பு எண்.W.P20977/2011 நாள்.08.12.2011-ன்படி கடை எண்.1 மற்றும் 2-யை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கடை எண். 3-யை மனுதாரர் விருப்பப்பட்டால் தொடர்ந்து நடத்தலாம் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

எனவே, கடை எண்.1, 2-யை 07.03.2012-ஆம் தேதி காலை 11 மணியளவில் மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளப்பட்டது. கடை எண்.3-யை தற்போதைய குத்தகைதாரர் திரு.ஆர். தங்கராஜ் தனது 06.03.2012-ஆம் தேதிய விண்ணப்பத்தில் தான் மருந்துக் கடையை நடத்தி வருவதாகவும், அதன் காலம் மார்ச் 2012-ல் முடிவடைவதாக தெரிவித்து கடையினை தொடர்ந்து நடத்திட தனக்கு கால நீட்டிப்பு செய்து தர கோரியிருந்தார். இதன் பேரில் கடை மேற்படியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

எனவே, மாநகராட்சியால் தன்பொறுப்பில் எடுத்துக்கொள்ளப்பட்ட ராமகிருஷ்ணாபுரம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்.1 மற்றும் 2-யை பொது ஏலம் நடத்தி மாதாந்திர வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக் குழுவின் தீர்மான எண் 24 நாள் 23.04.2012ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.8804/ 2008/ கிஅ11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 24 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண்.24 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண்** :25

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – வருடாந்திர குத்தகை இனங்கள் **01.04.2012** முதல் **31.03.2015**ம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்படைப்பு செய்தல் –தொடர்பாக.

பார்வை - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 9 நாள் 23.04.2012

கோயம்புத்துார் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்களுக்குமின்ஏலம் / ஒப்பந்தப்புள்ளி **29.03.2012** மற்றும் **11.04.2012** ஆகிய நாட்களில் நடைபெற்றது. இதில் கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு அதன் கண்டவாறு உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரப்பட்டது.

| வ.எண் | குத்தகை இனத்தின் பெயர் | அரசாங்க மதிப்பு (வருடத்திற்கு) | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| ஏலம் (29.03.2012) | | | | |
| 1 | தினசரி சுங்க வசூல் சுண்டக்காமுத்தூர் | 1,26,300 | ஜி.பாக்கியநாதன் | 2,01,965 |
| | | | சையதுஇப்ராகிம் | 1,82,500 |
| ஏலம் (11.04.2012) | | | | |
| 2 | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் ஏலமேடை | 8,52,200 | ஏ.சர்புதின் | – |
| | | | பி.முகமதுபஷிர் | – |
| | | | பி.அப்துல்கபூல் | – |
| | | | எஸ்.காளியப்பன் | – |
| | | | கே.ஏ.அபுதாஹிர் | – |
| | | | பி.ஏ.பத்ருதீர் | – |
| | | | வி.மணிவண்ணன் | – |
| | | | ஆர்.கிருஷ்ணமூர்த்தி | 10,17,910 |
| | | | கே.ஆர்.பழனிச்சாமி | 7,51,000 |
| | | | டி.எஸ்.அம்பிராஜ் | 9,23,000 |
| | | | சி.ஆர்.மணிகண்டன் | 9,52,000 |
| | | | ஏ.ஜோதிமணி | 9,00,001 |
| | | | எம்.ஏ.கலீல்ரஹ்மான் | 8,00,000 |
| 3 | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் கடை எண்.27 | 3850 (மாதவாடகை) | டி.சத்யராஜ் | 2314 |
| | | | பி.பால்ராஜ் | 5400 |
| | | | பி.திலகவதி | 6100 |
| | | | டி.எம்.முகமது பரூக் | 4500 |

அ) மேற்கண்ட 3 இனங்களில்வரிசை எண்.1ல் திரு.ஜி.பாக்கியநாதன் என்பவரும் வரிசை எண்.2ல் ஆர்.கிருஷ்ணமூர்த்தி என்பவரும் வரிசை எண்.3ல் திருமதி.பி.திலகவதி என்பவரும் அரசாங்க மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக உயர்ந்தபட்ச தொகைக்கு ஏலம் கோரியதால் இவர்களுக்கு ஏலம் ஒப்படைப்பு செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 9 நாள் 23.04.2012ன் பரிந்துரையின்பேரில், மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**அனுமதிக்கலாம் ந.க.எண்.698/2012/பி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 25 நாள் 27.04.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 9 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் :26**

பொருள் - வரியில்லா இனங்கள்- கோயம்புத்துார் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - துடியலூர் வணிக வளாக கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்து உரிமம் புதுப்பிப்பது – தொடர்பாக

பார்வை –வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 7 நாள் 23.04.2012

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலதிதிற்குட்பட்ட வரியில்லா இனங்களான துடியலூர் வணிக கடைகள், இறைச்சிகடைகள், தினசரி கடைகள் மற்றும் பழைய கடைகள் ஆகியவற்றிற்கு 2011–12 ம் காலம் வரையிலான வாடகைத் தொகையினை துடியலூர் பேரூராட்சி மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இக்கடைகளுக்கு 01.04.2012 முதல் வசூல் செய்யப்பட வேண்டிய வாடகைத் தொகையினை நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 73 நாள் 17.02.2012 மேற்படி கடைகளுக்கான வாடகை தொகை மிகவும் குறைவாக உள்ளதால் இக்கடைகளை ஆய்வு செய்து வெளி மார்க்கெட் மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்ய இக்கடைகளை சுற்றியும் மேட்டுப்பாளையம் பிரதான சாலையில் உள்ள தனியார் வணிக கடைகளையும் விசாரணை செய்ததில் சதுரடிக்கு ரூ.25/– என்ற வகிதத்தில் வெளி மார்க்கெட் மதிப்பாக உள்ளது என வரிவசூலர் மற்றும் உதவி வருவாய் அலுவலக அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். இதனடிப்படையில் வணிகவளாக கடைகளுக்கு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

**வணிக வளாக கடைகள்**

**தரைதளம்**

| வ.எண் | கடை எண் | உரிமதாரர் பெயர் | மாதாந்திர வாடகை | கடையின் அளவு (சதுர அடி) | வெளி மார்க்கெட் நிலவரப்படி நிர்ணம் செய்யபட வேண்டிய வாடகை | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஆனந்தகுமார் | 5687 | 160 | 4000 | 6541 |
| 2 | 2 | எஸ்.ஆர். அமுதவேணி | 4431 | 160 | 4000 | 5096 |
| 3 | 3 | ராமையா | 4841 | 160 | 4000 | 5567 |
| 4 | 4 | சண்முகம் | 3307 | 160 | 4000 | 3803 |
| 5 | 5 | தவமணி | 7288 | 160 | 4000 | 8381 |
| 6 | 6 | எம்.பழனிசாமி | 4643 | 160 | 4000 | 5339 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | 7 | ராஜா | 3902 | 160 | 4000 | 4487 |
| 8 | 8 | எஸ்.பாலகிருஷ்ணன் | 4960 | 160 | 4000 | 5704 |
| 9 | 9 | எஸ்.பாலகிருஷ்ணன் | 3994 | 160 | 4000 | 4593 |
| 10 | 10 | ஆனந்தகுமார் | 5370 | 160 | 4000 | 6176 |
| 11 | 11 | சி.வி.பிரபாகர் | 2513 | 100 | 2500 | 2890 |
| 12 | 12 | டி.ஆர்.நாகராஜ் | 2183 | 100 | 2500 | 2510 |
| 13 | 13 | எம்.வெள்ளிங்கிரி | 2315 | 100 | 2500 | 2662 |
| 14 | 14 | பூபாலசரவணன் | 1720 | 100 | 2500 | 1978 |
| 15 | 15 | ம. ராஜன் | 1875 | 100 | 2500 | 2156 |
| 16 | 16 | ராஜேந்திரன் | 1257 | 100 | 2500 | 1446 |
| 17 | 17 | வரதராஜ் | 1455 | 100 | 2500 | 1673 |
| 18 | 18 | செந்தில்குமார் | 3968 | 100 | 2500 | 4563 |
| 19 | 19 | ஆர்.இளங்கோ | 1323 | 100 | 2500 | 1521 |
| 20 | 20 | ஏ.சி.நாகராஜ் | 1058 | 100 | 2500 | 1217 |
| 21 | 21 | ரவிச்சந்திரன் | 2315 | 160 | 4000 | 2662 |
| 22 | 22 | ஏ.எஸ்.சாதிக்பாஷா | 5158 | 160 | 4000 | 5932 |
| 23 | 23 | டி.கே.லெஜீஸ் | 8134 | 256 | 6400 | 9354 |

முதல் தளம்

| வ.எண் | கடை எண் | உரிமதாரர் பெயர் | மாதாந்திர வாடகை | கடையின் அளவு (சதுர அடி) | வெளி மார்க்கெட் நிலவரப்படி நிர்ணம் செய்யபட வேண்டிய வாடகை | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|---|---|---|
| 24 | 24 | மனோஜ்குமார் | 4850 | 160 | 4000 | 5578 |
| 25 | 25 | எம்.எஸ்.கோவிந்தசாமி | 1390 | 160 | 4000 | 1599 |
| 26 | 26 | ஏ.சுபாஷ்ரத்னகுமார் | 2877 | 160 | 4000 | 3309 |
| 27 | 27 | டி.கே.ஆறுமுகம் | 1257 | 160 | 4000 | 1446 |
| 28 | 28 | ஆர்.வெஙகடாசலம் | 1390 | 160 | 4000 | 1599 |
| 29 | 29 | எம்.பழனிசாமி | 1455 | 160 | 4000 | 1673 |
| 30 | 30 | சம்பத்குமார் | 1257 | 100 | 2500 | 1446 |
| 31 | 31 | டி.பி.மணி | 556 | 100 | 2500 | 639 |
| 32 | 32 | சுபாஷினி | 1455 | 100 | 2500 | 1673 |
| 33 | 33 | வி.டி.கதிரவன் | 1423 | 100 | 2500 | 1636 |
| 34 | 34 | ஏ.எஸ்.சாதிக்பாஷா | 4960 | 100 | 2500 | 5704 |
| 35 | 35 | ம.வேல்முருகன் | 1455 | 60 | 1500 | 1673 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 36 | 36 | ஓமணா | 993 | 80 | 2000 | 1142 |
| 37 | 37 | சக்திவேல் கணேஷ் | 1390 | 100 | 2500 | 1599 |
| 38 | 38 | பார்பதி | 1390 | 100 | 2500 | 1599 |
| 39 | 39 | கோபி கண்ணன் | 847 | 100 | 2500 | 974 |
| 40 | 40 | பன்னீர் செல்வம் | 993 | 100 | 2500 | 1142 |
| 41 | 41 | எம்.பழனிசாமி | 993 | 100 | 2500 | 1142 |
| 42 | 42 | ஏ.சி.நாகராஜ் | 914 | 100 | 2500 | 1051 |
| 43 | 43 | ராஜேஷ் | 993 | 100 | 2500 | 1142 |
| 44 | 44 | ஜோஸ்பின் கிரிஸ்டல் | 2024 | 100 | 2500 | 2328 |
| 45 | 45 | ஏ.சி.நாகராஜ் | 495 | 100 | 2500 | 569 |
| 46 | 46 | ஏ.சி.நாகராஜ் | 495 | 100 | 2500 | 569 |

மேற்படி வணிக வளாக கடைகளில் 1 முதல் 23 வரையிலான கடைகள் தரைதளத்திலும் 24 முதல் 46 வரையிலான கடைகள் முதல் தளத்திலும் உள்ளன. இக்கடைகளில் கடை எண் 24 மற்றும் 44க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 9 ஆண்டுகள் முடிவுபெறவில்லை.

மேற்படி வணிக வளாக கடைகளில் கடை எண் 24 மற்றும் 44 நீங்கலாக மீதமுள்ள 44 கடைகள் உரிமதாரர்களுக்கு ஒப்படை செய்து ஒன்பது வருடஙளுக்கு மேல் உள்ளதால் இக்கடைகளுக்கு அரசானை எண் 92 ந.நி.ம.கு.வ.துறை நாள்– 03.07.2007ல் தெரிவித்துள்ளபடி வெளிமார்க்கெட் மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

மேற்படி வணிக வளாகத்தில் தரைதளத்தில் கடை எண் 1,2,3,5,6,7,8,9,10,11,12,13 மற்றும் 18,22,23 ஆகிய 15 கடைகளுக்கும், முதல் தளத்தில் கடை எண் 34,35 ஆகிய இரண்டு கடைகள் ஆக மொத்தம் 17 கடைகளின் தற்பொதைய வாடகை தொகை வெளி மார்க்கெட் மதிப்பை காட்டிலும் கூடுதலாக உள்ளதால் இக்கடைகளுக்கு முந்தைய வாடகையிலிருந்து 15% வாடகை உயர்வு செய்து மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் புதுப்பிக்கலாம்.

மேலும் தரைதளத்தில் உள்ள கடைகளில் கடை எண் 4,14,15,16,17,19,20,21, 25 முதல் 33 வரையிலும் மற்றும் 36 முதல் 43,45,46 ஆகிய கடைகளின் மாத வாடகை வெளி மார்க்கெட் மதிப்பினை காட்டிலும் குறைவாக உள்ளதால் இக்கடைகளுக்கு வெளிமார்க்கெட் மதிப்பின் அடிப்படையிலேயே வாடகை உயர்வு செய்து மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் புதுப்பிக்கலாம்.

மேலும் கடை எண் 24 க்கு 13.07.2011 ம் தேதிய பொது ஏலம் மூலம் திரு.மனோஜ்குமார் என்பவருக்கு மாத வாடகை ரூ 4850/– க்கு பேரூராட்சி மன்ற தீர்மான எண் 25 ன் படியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்கடை ஒதுக்கீடு செய்யப்பட்டு ஓராண்டு காலமே ஆகியுள்ளது.

அரசாணையின் படி கடைகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவதால் மேற்படி கடைக்கான உரிமைத் தொகையினை இதே வாடகை அடிப்படையில் 2012–13, 2013–14 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்து வாடகை வசூல் செய்யலாம். மேலும், கடை எண் 44க்கு உரிமம் ஒப்படை செய்யப்பட்டு ஒன்பது வருடஙகள் முடிவடையாத காரணத்தினால் முந்தைய வாடகையில் இருந்து 15% வாடகை உயர்வு செய்து மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் புதுப்பிக்க வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண் 7 நாள் 23.04.2012ல் அரசு வழிகாட்டி மதிப்பு 01.04.2012 முதல் உயர்வு செய்யப்பட்டுள்ள அடிப்படையில் வாடகை கணக்கீடு செய்து அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.97.2007ல் குறிப்பிட்டுள்ளவாறு வெளிச்சந்தை வாடகை மதிப்பு அல்லது 15 சதவீதம் வாடகை உயர்வு இவ்விரண்டில் எது அதிகமோ அத்தொகையினை மாதாந்திர வாடகையாக நிர்ணயம் செய்து மூன்றாண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு வழங்க மன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின்மீது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்** ந.க.எண். 1780/2012/ ஏ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 26 நாள் 27.04.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண். 7 நாள் 23.04.2012 பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 27**

பொருள் - வரியில்லா இனங்கள்- கோயம்புத்துார் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - துடியலுார் வணிக வளாக கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்து உரிமம் புதுப்பிப்பது – தொடர்பாக

பார்வை –வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 8 நாள் 23.04.2012

********

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வரியில்லா இனங்களான துடியலூர் வணிக கடைகள், இறைச்சிகடைகள், தினசரி கடைகள் மற்றும் பழைய கடைகள் ஆகியவற்றிற்கு 2011–12 ம் காலம் வரையிலான வாடகைத் தொகையினை துடியலூர் பேரூராட்சி மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளது. இக்கடைகளுக்கு 01.04.2012 முதல் வசூல் செய்யப்பட வேண்டிய வாடகைத் தொகையினை நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் 73 நாள் 17.02.2012 மேற்படி கடைகளுக்கான வாடகை தொகை மிகவும் குறைவாக உள்ளதால் இக்கடைகளை ஆய்வு செய்து வெளி மார்க்கெட் மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்ய வெளி மார்க்கெட் மதிப்பு பெறப்பட்டுள்ளது. இதில் சதுரடி ஒன்றிற்கு ரூ.20/– என்றளவில் தனியார் கடைகளுக்கு வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது இதனடிப்படையில் தினசரி மார்க்கெட் கடைகள் பழைய கடைகள் மற்றும் இறைச்சி கடைகள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

1. **<u>தினசரி மார்கெட் கடைகள்</u>**

| வ.எண் | கடை எண் | உரிமதாரர் பெயர் | மாதாந்திர வாடகை | கடையின் அளவு (சதுர அடி) | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை | வெளி மார்க்கெட் நிலவரப்படி நிர்ணம் செய்யபட வேண்டிய வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | எஸ்.வெங்கட்ராமன் | 318 | 48 | 366 | 960 |
| 2 | 2 | கே.பாலசுப்பிரமணியன் | 318 | 48 | 366 | 960 |
| 3 | 3 | எம்.கீதா சிவராமகிருஷ்ணன் | 318 | 48 | 366 | 960 |
| 4 | 4 | எஸ்.வெங்கட்ராமன் | 318 | 48 | 366 | 960 |
| 5 | 5 | சி.ஜெகன் | 318 | 48 | 366 | 960 |
| 6 | 6 | ஏ.சிவானந்தபெருமாள் | 318 | 48 | 366 | 960 |
| 7 | 7 | எஸ்.மல்லிகா | 318 | 48 | 366 | 960 |
| 8 | 8 | ஆர்.ஏ.ரவிக்குமார் | 318 | 48 | 366 | 960 |
| 9 | 9 | ஏ.ஆர்.அண்ணாமலை | 318 | 48 | 366 | 960 |
| 10 | 10 | கே.மந்திரிகுமார் | 318 | 48 | 366 | 960 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | 11 | கே.எம்.பாண்டி | 318 | 48 | 366 | 960 |
| 12 | 12 | சி.ஈஸ்வரி | 318 | 48 | 366 | 960 |
| 13 | 13 | ஆர்.நாராயணன் | 318 | 48 | 366 | 960 |
| 14 | 14 | ஆர்.நாராயணன் | 318 | 48 | 366 | 960 |
| 15 | 15 | எம்.பார்வதி | 318 | 48 | 366 | 960 |
| 16 | 16 | பி.ராமதாஸ் | 318 | 48 | 366 | 960 |
| 17 | 17 | எம்.ஈஸ்வரி | 318 | 48 | 366 | 960 |
| 18 | 18 | ஏ.சி.நாகராஜ் | 318 | 48 | 366 | 960 |
| 19 | 19 | ஏ.சி.நாகராஜ் | 318 | 48 | 366 | 960 |
| 20 | 20 | எம்.மோகன் | 318 | 48 | 366 | 960 |
| 21 | 21 | பி.பொன்ராஜ் | 318 | 48 | 366 | 960 |
| 22 | 22 | பி.ரமேஷ் | 318 | 48 | 366 | 960 |
| 23 | 23 | பி.சிவக்குமார் | 318 | 48 | 366 | 960 |
| 24 | 24 | ஆர்.ராமகிருஷ்ணன் | 318 | 48 | 366 | 960 |
| 25 | 25 | ஏ.எம்.பிரவின் | 318 | 48 | 366 | 960 |
| 26 | 26 | என்.எம்.சுரேஷ் | 318 | 48 | 366 | 960 |
| 27 | 27 | சி.ஈஸ்வரி | 318 | 48 | 366 | 960 |
| 28 | 28 | கே.ஆர்.ஆறுமுகம் | 318 | 48 | 366 | 960 |
| 29 | 29 | கே,ஆர்.ஆறுமுகம் | 318 | 48 | 366 | 960 |
| 30 | 30 | ஏ.அப்துல் லத்தீப் | 318 | 48 | 366 | 960 |
| 31 | 31 | எம்.கீதா சிவராமகிருஷ்ணன் | 318 | 48 | 366 | 960 |
| 32 | 32 | எம்.கீதா சிவராமகிருஷ்ணன் | 318 | 48 | 366 | 960 |
| 33 | 33 | எம்.கீதா | 318 | 48 | 366 | 960 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 34 | 34 | டி,ஆறுமுககனி | 318 | 48 | 366 | 960 |
| 35 | 35 | சி.செல்வி | 318 | 48 | 366 | 960 |
| 36 | 36 | ஜே.சந்திரன் | 318 | 48 | 366 | 960 |
| 37 | 37 | எஸ்.அனிதா | 318 | 48 | 366 | 960 |
| 38 | 38 | எஸ்.அனிதா | 318 | 48 | 366 | 960 |
| 39 | 39 | எஸ்.ரவிக்குமார் | 318 | 48 | 366 | 960 |
| 40 | 40 | ஆர்.வத்சலாதேவி | 318 | 48 | 366 | 960 |
| 41 | 41 | சத்யா | 318 | 48 | 366 | 960 |
| 42 | 42 | அன்புநிதி | 318 | 48 | 366 | 960 |
| 43 | 43 | எஸ்.மேகலா | 318 | 48 | 366 | 960 |
| 44 | 44 | கே.முருகேசன் | 318 | 48 | 366 | 960 |
| 45 | 45 | ஆர்.இளங்கோ | 318 | 48 | 366 | 960 |
| 46 | 46 | ரஙகசாமி | 318 | 48 | 366 | 960 |
| 47 | 47 | அரவிந்த் | 318 | 48 | 366 | 960 |
| 48 | 48 | அரவிந்த் | 318 | 48 | 366 | 960 |
| 49 | 49 | ஆர்.பாலதண்டாயுதம் | 318 | 48 | 366 | 960 |
| 50 | 50 | பூபாலசரவணன் | 318 | 48 | 366 | 960 |
| 51 | 51 | பூபாலசரவணன் | 318 | 48 | 366 | 960 |
| 52 | 52 | வி.ராஜு | 318 | 48 | 366 | 960 |
| 53 | 53 | சி.எஸ்.சதீஸ் | 318 | 48 | 366 | 960 |
| 54 | 54 | ஏ.செல்வராஜ் | 318 | 48 | 366 | 960 |
| 55 | 55 | ராஜேஸ்வரி | 318 | 48 | 366 | 960 |
| 56 | 56 | என்.ராஜ்குமார் | 318 | 48 | 366 | 960 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 57 | 57 | என்.ராஜ்குமார் | 318 | 48 | 366 | 960 |
| 58 | 58 | எஸ்.தனலட்சுமி | 318 | 48 | 366 | 960 |
| 59 | 59 | செந்தில்குமார் | 318 | 48 | 366 | 960 |
| 60 | 60 | அனுசுயா | 318 | 48 | 366 | 960 |
| 61 | 61 | பூபாலசரவணன் | 318 | 48 | 366 | 960 |
| 62 | 62 | ஆர்.பாலதண்டாயுதம் | 318 | 48 | 366 | 960 |
| 63 | 63 | ஞானதுரை | 318 | 48 | 366 | 960 |
| 64 | 64 | ஏ.ஜெயபால் | 318 | 48 | 366 | 960 |
| 65 | 65 | எஸ்.சூசைராஜ் | 318 | 48 | 366 | 960 |
| 66 | 66 | எஸ்.சூசைராஜ் | 318 | 48 | 366 | 960 |
| 67 | 67 | கே.ஆர்.செல்வராஜ் | 318 | 48 | 366 | 960 |
| 68 | 68 | கே.ஆர்.செல்வராஜ் | 318 | 48 | 366 | 960 |
| 69 | 69 | டி.சேகர் | 318 | 48 | 366 | 960 |
| 70 | 70 | பி.குப்புசாமி | 318 | 48 | 366 | 960 |
| 71 | 71 | ஜெயா | 318 | 48 | 366 | 960 |
| 72 | 72 | விஜயலட்சுமி | 318 | 48 | 366 | 960 |
| 73 | 73 | எஸ்.ஆறுமுகம் | 318 | 48 | 366 | 960 |
| 74 | 74 | ஆர்.தேவராஜ் | 318 | 48 | 366 | 960 |
| 75 | 75 | என்.பிரமிளா | 318 | 48 | 366 | 960 |
| 76 | 76 | என்.பிரமிளா | 318 | 48 | 366 | 960 |

